# இலங்கை வங்கியாளர் நிறுவகம்

## கல்வியியல் நிகழ்ச்சித்திட்டம்

பிரயோக வங்கித்தொழில் மற்றும்

நிதியியல் இடைநிலை

மற்றும்

பிரயோக வங்கித்தொழில் மற்றும்

நிதியியல் டிப்ளோமா

*வங்கித்தொழில் மற்றும் நிதியியலின்*

*புதிய பரிமாணங்களுக்கான*

*அறிவின் தேடல் மற்றும்*

*வழங்கலை நோக்கி*

1964 - 2017

IBSL

INSTITUTE OF BANKERS OF SRI LANKA

புதிய கல்வியியல் நிகழ்ச்சித்திட்டம் - 2017

@ இலங்கை வங்கியாளர் நிறுவகம்

தமிழாக்கம்: கந்தையா பாலசுப்பிரமணியம்
அட்டை மற்றும் பக்க வடிவமைப்பு: தர்சன நாரம்பனாவ
தட்டச்சு: திருமதி நிர்மலா சத்தியநேசன்

அச்சகம்:

நியு உதார

கங்கொடவில

நுகேகொட

# நிகழ்ச்சித்திட்ட பொதுநோக்கு

இப்புதிய கல்வியியல் நிகழ்ச்சித்திட்டமானது, வங்கிகள், ஏனைய நிதியியல் நிறுவனங்கள் சந்தைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் ஏற்கனவே ஈடுபட்டுள்ள தொழில்சார் நிபுணர்களுக்கு அல்லது அத்தொழிலில் ஆர்வமுடையவர்களுக்கும் வங்கிகள் மற்றும் நிதியியல் விடயங்களைக் கையாள்கின்ற கம்பனித் துறை தொழில்சார் நிபுணர்களுக்கும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் விடயங்களில் நடைமுறை தேர்ச்சியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்ச்சித்திட்டமானது, உள்நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் வங்கித்தொழில், நிதி மற்றும் கம்பனித் துறைகளில் அண்மைய காலப்பகுதியிலும் தற்பொழுதும் இடம்பெற்றுவரும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட செயற்பரப்பினை கொண்டுள்ள தற்பொழுதுள்ள இரண்டு பாடநெறிகளான வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறி மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா ஆகிய இரண்டு கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறியும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமாவும் ஆரம்பிக்கப்படுவதற்கு ஐக்கிய நாடுகளின் வங்கியாளர் பட்டய நிறுவனம்/ ஐஎவ்எஸ் இனால் இலங்கை வங்கியாளர் நிறுவகத்திற்கு 2000ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையினால், உள்நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் இடம்பெற்றுவரும் அபிவிருத்திகளையும், குறிப்பாக 2007இன் நடுப்பகுதியிலிருந்து இடம்பெற்றவரும் உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடிக்கான தீர்வு வழிமுறைகளின் ஒரு பகுதியாக தற்பொழுது இடம்பெற்றுவரும் உலகளாவிய சீர்திருத்தச் செயன்முறையின் காரணமாக எதிர்பார்க்கப்படும் புதிய அபிவிருத்திகளையும் கருத்திற்கொண்டு 2007இல் அளவில் இவற்றின் பாடங்களுக்கு சில திருத்தங்கள் செய்யப்பட்ட போதும் கூட இது காலங்கடந்த பழையதொன்றாகவே காணப்படுகிறது. மேலும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள தொழில்சார் நிபுணர்களுக்கும் தொழில் ஆர்வம் கொண்டோருக்கும் பட்டதாரி மட்டங்களில் பயில்தல் மற்றும் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும் பொருட்டு இலங்கை வங்கியாளர் நிறுவகம் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணத்துவப் பட்டதாரி நிகழ்ச்சித்திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான பணிகளைத் தற்பொழுது மேற்கொண்டு வருகின்றது. ஆகவே, இலங்கை வங்கியாளர் நிறுவகச் சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கமைய இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் ஆளுகைச் சபையானது தற்பொழுதுள்ள வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறி மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பதிலாக, பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலை மற்றும் பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா ஆகிய புதிய கல்வியியல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்தது. வங்கித்தொழில், நிதி மற்றும் கம்பனித் துறைகளின் தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட ஊழியர்களை நிரப்புவதும் இத்துறைகளில் தொழில்வாய்ப்புக்களைப் பெறவிழையும் மாணவர்களுக்கு தகைமையினை வழங்குவதுமே இதன் இலக்காகும்.

## நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள பாடங்கள்

நிகழ்ச்சித்திட்டமானது இரண்டு பாடநெறிகளையும் 17 சிறப்பியல்பு வாய்ந்த பாடங்களையும் உள்ளடக்கியுள்ளது. இரண்டு பாடநெறிகளாவன முதல் மட்டமான “பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலை” மற்றும் இறுதி அல்லது டிப்ளோமா தரமான “பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா” என்பனவாகும். 8 கட்டாய பாடங்களையும் 9 விருப்பத்திற்குரிய பாடங்களில் 5 பாடங்களையும் தெரிவு செய்யும் விதத்தில் பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதன்படி, தேர்வுநாடியொருவர் இந்நிகழ்ச்சித்திட்டத்தினைப் பூரணப்படுத்துவதற்கு 13 பாடங்களில் சித்தியடைதல் வேண்டும். இவ்வனைத்துப் பாடங்களும் நேரடியாக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளை உள்ளடக்கியிருப்பதுடன் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணத்துவத்திற்கான அடித்தள அளவுக்குறியீடொன்றினையும் ஏற்படுத்தியிருக்கின்றமையினால் ஏனைய தொழில்சார் நிபுணத்துவ பாடநெறிகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் மைய வங்கித்தொழில் மற்றும் நிதியியலுக்கான பாடங்களை இந்நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து தெரிவுசெய்து கொள்ளமுடியும். தொழில்சார் நிபுணர்கள் தமது தேர்ச்சியையும் தகுதிகளையும் இற்றைப்படுத்திக் கொள்வதனை இயலச்செய்யும் பொருட்டு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளின் புதிய அபிவிருத்திகளை உள்ளடக்கும் விதத்தில் ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்குமொரு முறை பாடங்கள் திருத்தியமைக்கப்படும். இரண்டு பாடநெறிகளும் பாடங்களும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

### (1) பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலை (6 பாடங்கள்: இதில் 4 கட்டாய பாடங்கள் மற்றும் 4 பாடங்களில் 2 விருப்பத்திற்குரிய பாடங்கள்)

**கட்டாய பாடங்கள்**

1. நிதியியல் முறைமை அளவீடு
2. வர்த்தக வங்கித்தொழில்
3. வியாபாரக் கணக்கீடு
4. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சட்டங்களுக்கான அறிமுகம்

**விருப்பத்திற்குரிய பாடங்கள்**

1. பொருளியல் தத்துவங்கள்
2. வங்கித்தொழிலல்லாத நிதியியல் வியாபாரம்
3. நிதியியல் வாடிக்கையாளர் முகாமைத்துவம்
4. வியாபாரக் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல்

### (2) பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா (7 பாடங்கள்: 4 கட்டாய பாடங்கள் மற்றும் 5 பாடங்களில் 3 விருப்பத்திற்குரிய பாடங்கள்)

**கட்டாய பாடங்கள்**


1. பணப் பொருளாதாரம் மற்றும் நாணயக் கொள்கை
2. நிதியியல் முகாமைத்துவம்
3. பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி
4. கொடுகடன் முகாமைத்துவம்

**விருப்பத்திற்குரிய பாடங்கள்**

1. நிதியியல் நிறுவனங்களின் முகாமைத்துவம்
2. நிதியியல் சந்தைத் தொழிற்பாடுகள்
3. முதலீட்டு வங்கித்தொழில்
4. அபிவிருத்தி நிதி
5. மத்திய வங்கித்தொழில்

## தேர்ச்சி மற்றும் தகுதித் தன்மைகளின் அபிவிருத்தி

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பதவிகளிலுள்ள தொழில்சார் நிபுணர்களின் தேர்ச்சியையும் தகுதித்தன்மைகளையும் மூன்று முக்கிய துறைகளில் (விபரங்களுக்கு கீழேயுள்ள வரைபடத்தினைப் பார்க்கவும்) அபிவிருத்தி செய்வது தொடர்பில் இப்புதிய நிகழ்ச்சித்திட்டம் முக்கிய கவனம் செலுத்துகிறது. இவை, வியாபாரத்தினைக் கொண்டு நடத்துதல், நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதித் துறைகளிலுள்ள கொள்கை/ ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. ஒவ்வொரு துறைக்குமென குறித்துரைக்கப்பட்ட பாடங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்ற போதும் அனைத்துப் பாடங்களும் இம்மூன்று துறைகளையும் வெவ்வேறுபட்ட அளவுகளில் உள்ளடக்கியுள்ளன. அவர்கள் ஆற்றுகின்ற தொழிலின் மீது காத்திரமான விதத்தில் பயன்படுத்தக்கூடியவாறு அவர்களது தேர்ச்சியையும் தகுதிகளையும் மேம்படுத்துகின்ற முறையில் பாடங்கள் தரமான கோட்பாட்டு ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான அறிவினை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இக்கல்வியியல் நிகழ்ச்சித்திட்டத்தில் தகைமை பெற்றுள்ள ஆட்களின் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணத்துவத்தில் அவர்களது பதவிகளின் முன்னேற்றம் மிகக் காத்திரமானதாகவும் விரைவானதாகவும் இருக்கும். மேலும், மிக விரைவில் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள வங்கித்தொழில் மற்றும் நிதி தொடர்பான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குள் நுழைவதற்கும் அதனைப் பூர்த்தி செய்வதற்குமான சிறந்த வாய்ப்பினையும் இயலாற்றலையும் அவர்கள் கொண்டிருப்பர்.


அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சிகள்/ தகுதிகள்
வியாபாரத்தினை நடத்துதல் (10 நேரடி உள்ளீடுகள்)
நிறுவனங்களின் முகாமைத்துவம் (4 நேரடி உள்ளீடுகள்)
கொள்கை/ ஒழுங்கு முறைப்படுத்தல் சூழல் (3 நேரடி உள்ளீடுகள்)
பிவமநிஇ
1. நிதியியல் முறைமைகளின் அளவீடு
2. வர்த்தக வங்கித்தொழில்
3. வங்கித் தொழிலல்லா நிதியியல் வியாபாரம் (விருப்பத்திற் குரியது)
4. பொருளாதாரத் தத்துவங்கள் (விருப்பத்திற் குரியது)
பிவமநிடி
1. கொடுகடன் முகாமைத்துவம்
2. பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி
3. நிதியியல் முகாமைத்துவம்
4. நிதியியல் சந்தைத் தொழிற்பாடுகள் (விருப்பதிற்குரியது)
5. முதலீட்டு வங்கித்தொழில் (விருப்பத்திற்குரியது)
6. அபிவிருத்தி நிதி (விருப்பத்திற் குரியது)
பிவமநிஇ
1. வியாபாரக் கணக்கீடு
2. நிதியியல் வாடிக்கையாளர் முகாமைத்துவம் (விருப்பத்திற்குரியது)
3. வியாபாரக் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரங்கள் (விருப்பத்திற்குரியது)
பிவமநிடி
1. நிதியியல் நிறுவனங்களின் முகாமைத்துவம் (விருப்பத்திற்குரியது)
பிவமநிஇ
1. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சட்டங்களுக்கான அறிமுகம
பிவமநிடி
1. பணம் மற்றும் நாணயக் கொள்கைகளின் பொருளாதாரம்
2. மத்திய வங்கித்தொழில் (விருப்பத்திற்குரியது)

## நிகழ்ச்சித்திட்ட நடைமுறைப்படுத்தல் விதிகள்

(அ) வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறிக்காக புதிய மாணவ உறுப்பினர்களை பதிவு செய்தல் 2014 சனவரியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. இதன்படி, பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலைக்கான மாணவர்கள் மாத்திரம் 2014 சனவரி 1ஆம் நாளிலிருந்து பதிவு செய்யப்படுவர்.

(ஆ) 2013 திசெம்பர் 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ பதிவு செய்யப்பட்டு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறியினை ஏற்கனவே நிறைவு செய்துள்ள அல்லது அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவு செய்கின்ற மாணவ உறுப்பினர்கள் அவர்களது தற்றுணிபின்படி பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமாவை அல்லது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமாவை அல்லது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமாவை நேரடியாகத் தொடங்குவதற்கான விருப்பத்தேர்வினைக் கொண்டிருப்பர். எனினும், சிறந்த அறிவினையும் தகைமைகளையும் எடுத்துக்காட்டும் விதத்தில் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறியுடன் ஒப்பிடுகையில் அதிகளவிற்கு முக்கியத்துவம் கொண்ட பாடவிடயங்களை உள்ளடக்கிய பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலைப் பாடநெறியினைப் பயிலுமாறு பலமாக ஆலோசனை வழங்கப்படுகின்றனர்.

(இ) 2013 திசெம்பர் 31 அன்றோ அல்லது அதற்கு முன்போ வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறியிலிருந்தும் விதிவிலக்குப் பெற்றிருக்கின்ற மாணவ உறுப்பினர்கள் அத்தகைய விலக்கல்களின் அடிப்படையில் தமது தற்றுணிபின்படி பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமாவை அல்லது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா தொடங்குவதற்கான விருப்பத்தேர்வினை கொண்டிருப்பர்.

(ஈ) இலங்கை வங்கியாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களின் முக்கிய பாடங்கள் மற்றும் ஏனைய தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகளுக்கு மாத்திரம் பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலைப் பாடநெறியில் அப்பாடங்கள் இடம்பெற்றிருக்குமிடத்து மாத்திரம் பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறியின் சில குறிப்பிட்ட பாடங்களிலிருந்து விதிவிலக்களிப்பது பற்றி பரிசீலனையில் கொள்ளப்படும். பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா பாடநெறியிலுள்ள எந்தவொரு பாடத்திற்கும் விதிவிலக்கல்கள் வழங்கப்படமாட்டாது.

(உ) வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறி மற்றும் வங்கித்தொழில் மற்றம் நிதியியல் டிப்ளோமா என்பனவற்றிற்கான பரீட்சைகள் 2016 செத்தெம்பர் வரையும் தொடருமென்பதுடன் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறி மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா மாணவ

உறுப்பினர்களின் கோரிக்கையின் எண்ணிக்கையினைப் பொறுத்து மேலும் நீடிப்பது பரிசீலனையில் கொள்ளப்படும்.

(ஊ) வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறியில் தற்பொழுதுள்ள மாணவ உறுப்பினர்கள் பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலைப் பாடநெறிக்கு எந்தவொரு நேரத்திலும் மாறமுடியும். எனினும், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சான்றிதழ் பாடநெறியில் சித்தியடைந்த பாடங்களின் அடிப்படையில் பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பாடநெறிக்கு எந்தவொரு பாடத்திற்கும் விதிவிலக்கு வழங்கப்படமாட்டாது.

(எ) பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலைப் பாடநெறி மற்றும் பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா என்பனவற்றிற்கான பரீட்சைகள் ஆண்டிற்கு இரண்டு தடவைகள் அதாவது மாச்சிலும் செத்தெம்பரிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படும். ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சையானது மூன்று மணிநேர வினாத்தாள்களின் அடிப்படையில் மிக இரகசியமான எழுத்து மூலமான பரீட்சையாக இருக்கும் என்பதுடன், விண்ணப்பதாரிகளின் மாவட்ட அடிப்படையிலான பரம்பல்களைப் பொறுத்து கொழும்பிலும் தெரிந்தெடுக்கப்பட்ட வெளிமையங்களிலும் நடத்தப்படும்.

(ஏ) பரீட்சைச் செயலாற்றத் தரங்கள் பின்வருமாறு இருக்கும்.

A - அதிவிசேட சித்தி: 85 மற்றும் அதற்கும் மேல்

B - விசேட சித்தி: 75 - 84

C - திறமைச் சித்தி: 65 - 74

S - சித்தி: 45 - 64

F - சித்தியின்மை: 45 இற்குக் கீழ்

ஒவ்வொரு பரீட்சைத்தாளுக்குமான மொத்தப் புள்ளிகள், அனைத்து நோக்கங்களுக்காவும் அத்தகைய புள்ளிகள் தசம தானங்களைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இறுதிப் புள்ளி வழங்கும் நேரத்தில் முழுத்தானத்திற்குக் கொண்டு வரப்படும்.

(ஐ) பெறுபேறுகள், மிக நுணுக்கமான மீள்திருத்தல்கள் மற்றும் பரீட்சை செயன்முறைகள் மற்றும் தரம் என்பன மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான இணங்குவிப்புக்கள் சுயாதீனமான வெளிவாரி கணக்காய்வுகளின் பின்னர் ஆளுகைச் சபையினால் வெளியிடப்படும்.

(ஒ) ஒவ்வொரு பரீட்சையிலும் தோற்றியதன் பின்னர் உறுப்பினர்களுக்கு அலுவல்சார் கல்வியியல் தரத்துடன் கூடிய பாடவிபரங்கள் வழங்கப்படவுள்ளதுடன்

உறுப்பினரொருவர் ஒவ்வொரு பாடநெறியினையும் நிறைவு செய்ததும் தகைமையினை உறுதிப்படுத்துகின்ற (பி.வ.நி. இடைநிலை மற்றும் பி.வ.நி. டிப்ளோமா) இறுதிக் கல்வியியல் பாடவிபரங்களும் வழங்கப்படும்.

(ஓ) ஒவ்வொரு பாடநெறியிலும் தகைமை பெற்ற உறுப்பினர்களுக்கு இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் ஆளுகைச் சபையினால் அலுவல்சார் சான்றிதழ் வழங்கப்படும். பி.வ.நி. டிப்ளோமா சான்றிதழ் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும்.

(ஔ)விடைத்தாள்களை மீளத்திருத்தும் கோரிக்கைகள், பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் கட்டணமொன்றின் அடிப்படையில் அனுமதிக்கப்படும்.

## நிகழ்ச்சித்திட்டத்திற்காக பதிவு செய்தல்

பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலைப் பாடநெறிக்குத் தோற்றுவதற்காக இலங்கை வங்கியாளர் பயிற்சி நிறுவகத்தில் மாணவ உறுப்பினராக பதிவு செய்து கொள்வதற்குப் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) உரிமம் பெற்ற வங்கியொன்றின் அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற நிதி நிறுவனத்தின் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள அரச அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஊழியரொருவராக இருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் அல்லது நிறுவனமொன்றின் ஊழியரொருவர்; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம் பெற்றவர்; அல்லது பட்டதாரி மாணவர்; அல்லது

(ஈ) வங்கித்தொழில், நிதி, கணக்காய்வு, முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள தொழில்சார் தகைமை கல்வியியல் நிறுவகமொன்றினால் வழங்கப்பட்ட இறுதித் தகைமை

(உ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் க.பொ.த (உயர்தரம்) பாடநெறி அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் 2 திறமைச் சித்திகளுடன் 3 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த (சாதாரணம்) பரீட்சையில் கணிதவியல் பாடத்தில் திறமைச்சித்தி அல்லது இலங்கையில்; அல்லது வெளிநாட்டில் அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி

(ஊ) க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் அல்லது இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் அதற்குச் சமமான பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (சாதாரணம்) அல்லது இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் அதற்குச் சமமான பரீட்சையில் இரு தடவைகளில் கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்; அல்லது

(எ) க.பொ.த (சாதாரணம்) அல்லது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அதற்குச் சமமான பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

# பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலைப் பரீட்சைக்கான பாடநெறி

## கல்வியியல் பெயர்/ தகைமைகள்: பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலை

இப்பாடநெறியானது, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் வழங்குவதனால் மாணவ உறுப்பினர்கள் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் கல்வியியல் நிகழ்ச்சித்திட்டம் அதாவது பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா மற்றும் உத்தேச உள்ளகப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமான “பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பட்டப்படிப்பு” என்பனவற்றின் அடுத்த கட்டங்கள் உட்பட சிறப்பியல்பு வாய்ந்த உயர்தர பாடநெறிகளைத் தொடர்வதனையும் இயலச்செய்யும். ஆகவே, இப்பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கும் மாணவர்களுக்கும் தத்துவங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றிய பரந்தளவிலான துறைகள் பற்றிய பின்னணி அறிவினை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பாடங்கள் நிதியியல் முறைமை அளவீடு, வர்த்தக வங்கித்தொழில், வியாபாரக் கணக்கீடு, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சட்டங்களுக்கான அறிமுகம், பொருளாதாரத் தத்துவங்கள், வங்கித்தொழிலல்லாத நிதியியல் வியாபாரம், நிதியியல் வாடிக்கையாளர் முகாமைத்துவம் மற்றும் வியாபாரக் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. ஏற்கனவே இத்துறையிலுள்ள தொழில்சார் நிபுணர்கள் அவர்களது அறிவினை ஒழுங்குமுறைப்படுத்தி மீளவமைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்குமிடத்து, மாணவர்கள் தெளிவான வழிகாட்டல்களுடன் முறையியல் சார்ந்த விதத்தில் இவற்றினைப் பயின்று கொள்வதற்கு ஆரம்பிக்கலாம். இப்பாடநெறியானது 4 கட்டாய பாடங்களையும் 2 பாடங்களில் கட்டாயம் சித்தியடைய வேண்டிய 4 விருப்பத்திற்குரிய பாடங்களையும் உள்ளடக்கியுள்ளது. இப்பாடங்கள் தொடர்பான பொதுநோக்கு, குறிக்கோள் மற்றும் உள்ளடக்கங்கள் கீழே தரப்படுகின்றன.

### 1. நிதியியல் முறைமையின் அளவீடு

#### I. பாடம் தொடர்பான பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

பணக் கொடுக்கல்வாங்கல் முறைமையான நிதியியல் முறைமையில் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழிற்பாடுகள் இடம்பெறுகின்றன. நிதியியல் முறைமையின் அடிப்படைக் கூறுகள் பணம், மத்திய வங்கி, நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் சந்தைகள், கொடுப்பனவு முறைமைகள் மற்றும் நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. நாணயப் பணிகளை வழங்குவதன் மூலமாக நிதியியல் முறைமையானது பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கின்றது. எனவே, உண்மைப் (பொருட்கள், பணிகள் மற்றும் காரணிகள்) பாய்ச்சல்களுக்கும் நிதியியல் பாய்ச்சல்களுக்குமிடையிலான செயலாற்றங்கள் நாட்டின் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதாரச் செயலாற்ற மட்டத்தினைத் தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாகும். இதன்படி, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையிலுள்ள

மாணவர்கள் தொழில்சார் நிபுணத்துவ பணிகளில் ஏதேனும் சிறப்பியல்பு கொண்ட தன்மையினைத் தெரிவு செய்வதற்கு அவர்களை இயலுமைப்படுத்துவதற்கு நிதியியல் முறைமையின் தொழிற்பாட்டு பொறிமுறையினை முதலில் விளங்கிக் கொள்வது அவசியமானதாகும். ஆகவே, இப்பாடமானது, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளிலுள்ள தொழில்சார் நிபுணர்களின் சிறந்த செயலாற்றத்திற்கும் தமது பதவிகளை விருத்தி செய்து கொள்வதற்கும் ஏற்ற சிறப்பியல்பு வாய்ந்த துறையினைப் பற்றி விளங்கிக் கொள்ளவும் தெரிவு செய்து கொள்வதற்கும் அவர்களை இயலச்செய்யும் விதத்தில் நாட்டிலுள்ள நிதியியல் முறைமையின் பரந்த தொழிற்பாட்டு அமைப்பு தொடர்பான அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) பொருளாதாரத்தில் நிதியியல் முறைமையின் வகிபாகம்.

(ஆ) பணம்: பரிணாமம், தொழிற்பாடுகள், அச்சிடல், பணநிரம்பல் மற்றும் பணத்திற்கான கேள்வி.

(இ) கொடுப்பனவுச் சாதனங்கள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்: நாணயம், காசோலை, கொடுப்பனவு அட்டைகள், “சிலிப்ஸ்” என அழைக்கப்படும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, காசோலை தீர்ப்பனவு மற்றும் சுற்றோட்டக் குறைப்பு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பன்னாட்டு நிதி/ பணவனுப்பல் மாற்றல் முறைமைகள் (சுவிப்ற், மணிகிறாம், வெஸ்டேர்ன் யூனியன் போன்றவை) இலத்திரனியல்/ செல்லிடக் கொடுப்பனவுகள்.

(ஈ) நிதியியல் சந்தைகள் மற்றும் பிணையங்கள்/ சாதனங்கள்: வைப்புக்கள், இருப்புக்கள், முறிகள், மீள்கொள்வனவுகள், நேர்மாற்று மீள்கொள்வனவுகள், வெளிநாட்டுச் செலாவணி, அமைக்கப்பட்ட நிதி, நிதியியல் பெறுதிகள், கூறுகள் மற்றும் துணைகர தொழில்முயற்சி மூலதனங்கள்.

(உ) நிதியியல் நிறுவனங்கள்: மத்திய வங்கி, நிதியியல் இடையீட்டாளர்கள் (வர்த்தக வங்கிகள், நிதிக் கம்பனிகள், குத்தகைக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், காரணிப்படுத்தல் கம்பனிகள், கூட்டுறவுச் சங்கங்கள்) நிதியியல் பணிகளை வழங்குவோர் (முதலீட்டு வங்கிகள், நிதிய முகாமைத்துவக் கம்பனிகள், கொடுப்பனவு பணிகள் வழங்குவோர், நாணய மாற்றுநர்கள், வணிகர்கள், தரகர்கள், செலாவணி, பிணையங்களின் வைப்பாளர்கள்).

(ஊ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு: நிதியியல் நெருக்கடிகள் (வங்கித்தொழில், சந்தைகள் மற்றும் படுகடன் நெருக்கடிகள்) ஆசியாவின் நிதியியல்

நெருக்கடியினையும் அண்மைய உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் பகுப்பாய்வு (அதன் தன்மை, காரணங்கள், அதன் தாக்கம் மற்றும் தீர்வுகள்), முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள் (மிகப் பெரியவை முறிவடைந்துவிடாமல் பாதுகாத்தல்) நிழல் வங்கித்தொழில் மற்றும் இடர்நேர்வுகள், நிதியியல் உறுதிப்பாட்டுக் கட்டமைப்பு என்பனவற்றைப் பகுப்பாய்வு செய்தல்.

(எ) நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பு பொறிமுறை: நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தல்கள் (மூலதனச் சந்தை, வங்கிகள், வங்கில்லா நிதியியல் நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி) நிதியியல் உறுதிப்பாட்டு ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் அவர்களின் முக்கிய வகிபாகம் மற்றும் முக்கிய சாதனங்கள் என்பன தொடர்பான விடயங்கள்.

## 2. வர்த்தக வங்கித்தொழில்

### I. பாடம் தொடர்பான பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

வர்த்தக வங்கித்தொழில் முக்கியமாக, பொதுமக்களின் அனைத்துப் பிரிவினரினதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புபட்டதாகவும் அவற்றிற்கு வசதியளிப்பதாகவும் காணப்படுகின்றது. வர்த்தக வங்கித்தொழிலானது பணம் அதன் பொருளாதாரத் தொழிற்பாடுகளை காத்திரமான விதத்திலும் விரைவாகவும் ஆற்றுவதற்கு வசதியளிப்பதன் மூலம் பணத்தின் மீதான அதன் பணியினை மேற்கொள்கிறது. வர்த்தக வங்கிகளில்லாதவிடத்து பணத்தின் வகிபாகம் மிகப் புராதன காலத்தினைப் போன்று காசினை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் தற்போதைய உலகினை நினைத்துப்பார்க்கவே முடியாமலிருந்திருக்கும். மரபு ரீதியாக, வர்த்தக வங்கித்தொழிலானது பொருளாதாரத்தில் நிதியியல் தொழிற்பாடுகளின் மையக்கூறாக விளங்குகின்றது. பொதுமக்களின் நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு வதியளிப்பதற்காக வர்த்தக வங்கித்தொழில் புத்தம்புதிய சாதனங்களை படிப்படியாக உருவாக்கி வருகின்றது. இச்சாதனங்கள், நிதியியல் தொழிற்பாடுகளின் பெரும்பாலும் அனைத்து அம்சங்களுடனும் அதாவது சேமிப்புக்களைத் திரட்டுதல், கடன்பாட்டாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் நிதிகளை வழங்குதல், உள்நாட்டிலும் எல்லைகள் கடந்தும் பணக் கொடுக்கல்வாங்கல் பணிகளை வழங்குதல் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றன. இவ்வனைத்து நிதியியல் பணிகளினதும் வழங்கலானது, வர்த்தக வங்கித்தொழில் முறைமையின் முறைமையியல் சார்ந்த முக்கியத்துவம் கருதி அரசாங்கத்தின் பெருமளவு ஒழுங்குவிதிகளுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டதாக விளங்குகின்றது. அடிப்படையில், நாடொன்றின்

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிதியியல் உறுதிப்பாடு ஆகிய இரண்டிற்கும் வர்த்தக வங்கிகளினால் வசதியளிக்கப்படுவதுடன் அவற்றின் செல்வாக்கிற்கும் உட்பட்டிருக்கின்றன, ஆகவே, இப்பாடமானது, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்கள் வங்கியொன்றின் எந்தவொரு பிரிவிலும் பணியாற்றுவதற்கு அல்லது கையாள்வதற்கு இயலுமைப்படுத்தும் விதத்தில் வர்த்தக வங்கித்தொழில் வியாபாரங்களின் தொழிற்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவினை வழங்குகின்ற விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) வங்கித்தொழிலின் பரிணாம வளர்ச்சி: கோல்ட் ஸ்மித், தங்க நியமங்கள் மற்றும் வங்கித் தாள்கள்

(ஆ) வங்கித்தொழில் வியாபார துறைகள்: நிதியினை அடிப்படையாகக் கொண்ட மற்றும் கட்டணத்தினை அடிப்படையாகக் கொண்ட வியாபாரங்கள்

- நிதியினை அடிப்படையாகக் கொண்டவை: வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் (நடைமுறை, சேமிப்பு, தவணை வைப்புக்கள், வொஸ்ரோ போன்றவை) பரீட்சிப்பு மற்றும் தீர்ப்பனவு வசதிகள், கடன் வழங்கல், (மேலதிகப் பற்றுக்கள், தவணைக் கடன்கள், வர்த்தக நிதி, கொடுகடன் அட்டைகள் போன்றவை) கடன்பாடுகள் (வங்கிகளுக்கிடையிலானவை, தொகுதிக்கடன்கள், மீள்கொள்வனவு) மற்றும் முதலீடுகள்
- கட்டணத்தினை அடிப்படையாகக் கொண்டவை: கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராதவைகள், கொடுப்பனவுகள் மற்றும் முதலீட்டுப் பணிகள்

(இ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்/ வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகள்: வெளிநாட்டு வியாபாரங்கள் தொடர்பில் வதிவோர் மற்றும் வதிவற்றோர்களுக்கான அனுமதிக்கப்பட்ட கணக்குகள்/ வைப்புக்கள், வெளிநாட்டு நாணயத்திலான கடன் வழங்கல், வாங்கல் மற்றும் விற்றல், (கருமபீடங்கள், உடன் மற்றும் முன்னோக்கியவை போன்றன) பணவனுப்பல்கள், நொஸ்ரோ கணக்குகள்)

(ஈ) வங்கித்தொழில் வியாபார மாதிரிகள்: கம்பனி வங்கித்தொழில், சில்லறை வங்கித்தொழில், கொடுக்கல்வாங்கல் வங்கித்தொழில், பன்னாட்டு வங்கித்தொழில்/ கரைகடந்த வங்கித்தொழில், பிரபஞ்ச வங்கித்தொழில், இஸ்லாமிய வங்கித்தொழில்

(உ) வங்கித்தொழில் வழங்கல் வழிமுறைகள்: வங்கிக் கிளைகள்/ நிலையங்கள், தன்னியக்கக் கூற்றுப் பொறிகள், இணையத்தள வங்கித்தொழில், செல்லிட/ தொலைபேசி வங்கித்தொழில்

(ஊ) வங்கித்தொழில் ஆற்றல் மதிப்பீடு: சொத்துக்களின் தரம், திரவத்தன்மை, இலாபத்தன்மை, கடன் தீராற்றல்/ மூலதனம், உணர்திறன் மற்றும் முக்கிய ஆற்றல் குறிகாட்டிகள்

(எ) வங்கித்தொழில் இடர்நேர்வு முகாமைத்துவம்: வங்கித்தொழில் இடர்நேர்வுகள் (கொடுகடன், திரவத்தன்மை, சந்தை, தொழிற்பாட்டு மற்றும் உபாய இடர்நேர்வுகள் மற்றும் இடர்நேர்வுக் குறிகாட்டிகள்) இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள்/ வழிமுறைகள் (கடன் வழங்கல் கொள்கைகள் - வரையறைகள், கடப்பாடுகள், பிணைகள், ஏற்பாடுகள்/ பெறுமதி இழப்புக்கள் போன்றவை சொத்து - பொறுப்பு இடைவெளி முகாமைத்துவம், திரவச் சொத்துக்கள், எதிர்பாராத கொடுகடன் வழிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள், தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள், மூலதனம்)

(ஏ) வங்கித்தொழில் முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை: இலங்கையில் முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகள் மற்றும் முறைகள் - உரிமம் வழங்குதல், முக்கியமான ஒழுங்குவிதிகள் (மூலதனம் போதுமை, திரவச்சொத்து விகிதம், கடன்கள் மற்றும் ஒதுக்கங்களை வகைப்படுத்தல், பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி, கம்பனி ஆளுகை, பங்குடமை வரையறைகள், பங்குரிமை மூலதனத்தில் முதலீடுகள் மீதான வரையறைகள், கடன் வசதிகள் மீதான வரையறைகள், வைப்புக் காப்புறுதி, நிதியியல் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வுகளுக்கான தேவைப்பாடுகள்) மேற்பார்வை (இடர்நேர்வுகள் - மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை எதிர் மூலதனப்போதுமை, சொத்துக்கள், முகாமைத்துவ இயலாற்றல், வருவாய், திரவத்தன்மை, தொடர்ச்சியான/ தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை, பரீட்சிப்புக்கள்/ தலத்திலான மேற்பார்வை, நேரகாலத்துடனான எச்சரிக்கை அறிகுறிகளை வழங்குதல் மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல்), பாசல் நியமங்கள் (மையத் தத்துவங்கள், பாசல் III மூலதன விகிதம், திரவத்தன்மை விகிதம் மற்றும் முடுக்கி விகிதங்கள்)

(ஐ) இலங்கையில் அண்மைய வங்கித்தொழில் துறையின் போக்குகள் மற்றும் செயலாற்றம்

(ஒ) அண்மைய உலகளாவிய வங்கித்தொழில் வியாபாரப் போக்குகள் மற்றும் பிரச்சனைகள் மற்றும் உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளிலிருந்தான தாக்கம்

## 3. வியாபாரக் கணக்கீடு

### I. பாடம் தொடர்பான பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

கணக்கீடு என்பது அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் நியமங்களின் நியதிகளில் வியாபாரம் தொடர்பான நிதியியல் விளைவுகளைக் காட்டுகின்றதொரு முறையாகும். சரியான கணக்கீட்டு முறையியல்களைப் பிரயோகிப்பது வியாபாரத்தின் நிதியியல் நிலைமையின் உண்மையான நிலைமையினைக் காட்டுகிறது. நிதியியல் கூற்றுக்களின் உள்ளடக்கமும் சமர்ப்பிப்புக்களும் நிதியியல் நிலையினைக் காட்டுவதுடன் வியாபாரங்களிடையே கணக்கீட்டு நியமங்கள் வேறுபடுவதனையும் முக்கியமாக எடுத்துக்காட்டுகின்றன. கணக்கீடானது தனியானதொரு தொழில் நிபுணத்துவம் சார்ந்த துறையாகக் காணப்படுவதுடன் இதற்கு, கோட்பாடும் நடைமுறையும் சார்ந்த பயிற்சி பல ஆண்டுகளாக தேவைப்படுகின்றது. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும் அர்ப்பணிப்பும்/ தகைமையும் கொண்ட கணக்கீட்டு தொழில்சார் நிபுணர்கள் தேவைப்படுவர். ஆகவே, இப்பாடமானது சுவாரஜ்யமற்றதும் மிகக் கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டி இலக்குகளுடன் தொடர்பான பயிற்சிகளைக் கொண்டதும் பெருமளவு எண்களுடன் கூடிய கணக்கீட்டு கோட்பாடுகளுடனும் நியமங்களுடனும் இசைந்து செல்லும் கணக்கீட்டின் தொழில்சார் நிபுணத்துவப் பாடமாக கற்பிக்கப்படுவதனை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும், வங்கித்தொழில் மற்றும் நிதி வியாபாரங்களிலுள்ள தொழில்சார் நிபுணர்கள் அவர்கள் தொழில் பார்க்கும் நிறுவனங்களின் நிதியியல் நிலைமையினை மதிப்பீடு செய்வதற்கும், நிறுவனத்தில் அவர்களது பணிகளை காத்திரமான முறையில் பங்களிப்பதற்கும் அவர்களது வியாபார வாடிக்கையாளர்களின் கொடுகடன் நம்பத்தன்மையினையும் செயலாற்றத்தினையும் மதிப்பீடு செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் அவர்களது தொழில் வழங்கும் நிறுவனத்தினதும் கம்பனி வாடிக்கையாளர்களினதும் நிதியியல் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள முக்கிய விடயங்களை விளங்கிக் கொள்வது அவசியமாகும். வியாபார நிறுவனங்களின் நிதியியல் கூற்றுக்களை விளங்கிக் கொள்வது, நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் ஆற்றல் மற்றும் நீண்ட கால உறுதிப்பாடு என்பன தொடர்பில் ஊழியர்களின் பணி தொடர்பிலான முக்கியத்துவத்தினை தெரிந்து கொள்வதனை இயலச்செய்யுமாகையால் அது ஊழியர்களின் ஒருமைப்பாட்டினை மேம்படுத்தும். ஆகவே, இப்பாடமானது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிதியியல் மற்றும் ஏனைய வியாபார முயற்சிகளுடன் முக்கியமாக தொடர்புபட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பனவற்றின் கீழ் தயாரிக்கப்பட்ட முக்கிய நிதியியல் கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கான அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) அடிப்படைக் கோட்பாடுகள், அடிப்படைக் கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனையவை: நிதியியல் கணக்கீடுகளின் குறிக்கோள், காசு மற்றும் அட்டுறுக் கோட்பாடுகள்

(ஆ) பேரேட்டுக் கணக்குகளையும் துணை ஆவணங்களையும் தயாரித்தல்: பேரேட்டுக் கணக்குகள், வங்கி இணக்கக்கூற்றுக்கள், பரீட்சை மீதி மற்றும் வரிகள் போன்ற ஏனைய மாதிரிக் கணக்கீட்டு முறைகள்

(இ) நிதியியல் சாதனங்களின் அங்கீகரிப்பு மற்றும் அளவுமுறைகள் (இலங்கை கணக்கீட்டு நியமம் 39) மற்றும் ஏனைய சொத்துக்கள் (இலங்கை கணக்கீட்டு நியமம் 16, இலங்கை கணக்கீட்டு நியமம் 17 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 40): இலாபம் மற்றும் இழப்புக்களினூடான சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் (நிதியியல் மற்றும் தொழிற்பாடுகள்) சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள், முதலீட்டுச் சொத்துக்கள், நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு மற்றும் சேகரிக்க முடியாத தன்மை மற்றும் பெறுமதி இழப்பிற்குப் பின்னரான வட்டி வருமானம்.

(ஈ) நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அறிமுகம் மற்றும் நிதியியல் சாதனங்களை வெளிப்படுத்துதல் (நிதியியல் நிலைமைக் கூற்றுக்கள், மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம், காசுப்பாய்ச்சல் மற்றும் பங்குரிமை மூலதனத்தில் ஏற்படுகின்ற மாற்றம்) என்பன: தனியுடமை, பங்குடமை, வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள், உற்பத்திக் கம்பனிகள், ஏனையவை (இலாபநோக்க நிறுவனங்களல்லாதவை, களரிகள் மற்றும் அமைப்புக்கள்)

(உ) நிதியியல் நிறுவனங்களின் (வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள்) நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் வங்கித்தொழில் சட்டம், நிதித்தொழில் சட்டம் மற்றும் காப்புறுதித் தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகள், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் மற்றும் கம்பனிச் சட்டம் மற்றும் இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் என்பனவற்றின் சட்ட ரீதியான தேவைப்பாடுகள்

## 4. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சட்டங்களுக்கான அறிமுகம்

### I. பாடம் தொடர்பான பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

வங்கித்தொழில் மற்றும் நிதித் துறைகளுடன் தொடர்பான சட்டங்கள் பெரும் எண்ணிக்கையிலும் சிக்கல் நிறைந்தனவாகவும் காணப்படுவதன் காரணமாக அத்தகைய சட்டங்களில் பாண்டித்தியம் பெறுவதற்கு சட்ட நிபுணர்கள் வாழ்நாள் முழுவதும் அவற்றைக்கற்று நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஆகவே, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சட்டங்களை ஒரு பாடமாக குறுகிய காலப்பகுதியில் கற்றுவிட முடியாது. சட்டவாக்க முறைமை, சட்டவாக்க தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள்/ உற்பத்திகள், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பாதுகாப்பு மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் சட்ட ஏற்புடைத்தன்மை என்பன அனைத்து நிதியியல் வியாபாரத் துறைகளுடனும் தொடர்பான பொதுவான சட்ட விடயங்களாகக் காணப்படுகின்றன. அனைத்து வங்கித்தொழில் மற்றும் நிதி தொழில்சார் நிபுணர்கள் அனைவரும் தொடர்பான சட்டங்களுக்கு இணங்கியொழுகும் விதத்தில் தமது கடமைகளை ஆற்றும் பொருட்டும் வியாபாரத் தொழிற்பாடுகளின் போது எதிர்நோக்கப்படும் சட்ட ரீதியான சிக்கல்களின் போது நிபுணர்களின் சட்ட ரீதியான ஆலோசனைகளை எதிர்பார்ப்பதற்கும் இச்சட்ட விடயங்களில் அறிவுடையோராக இருத்தல் வேண்டும். ஆகவே, இப்பாடமானது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் வியாபாரங்களுக்கான சட்ட அடிப்படையின் ஆரம்பக் கூறுகள் மீதான அறிவினை மாத்திரமே வழங்கும். வங்கித்தொழில் மற்றும் நிதியியலின் மீது அடிக்கடி பிரயோகிக்கப்படுகின்ற முக்கிய சட்டங்களின் அடிப்படைப் பண்புகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய தொடர்பான பாடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) அறிமுக விடயங்கள்: இலங்கையிலுள்ள சட்ட முறைமைகள் (சட்டத்தின் மூலங்கள் - நியதிச் சட்டம், ரோமன் ஒல்லாந்தர் சட்டம், ஆங்கிலேயர் சட்டம் மற்றும் வழமைச் சட்டங்கள், நீதிமன்ற முறைமைகள், நீதிமன்ற முன்தீர்ப்பு, நியதிச்சட்டங்களுக்கான விளக்கங்கள்) ஒப்பந்த ரீதியான சட்டம் (ஒப்பந்தங்களின் தன்மை மற்றும் பண்புகள், ஒப்பந்தங்களை உருவாக்குதல், ஒப்பந்தங்களிலுள்ள முக்கியமான கூறுகள், ஒப்பந்தங்களை முடிவுறுத்தல்) மற்றும் வங்கியாளர் வாடிக்கையாளர் உறவுமுறை: வரைவிலக்கணங்கள், உறவு முறைகளை ஆரம்பித்தல் மற்றும் முடிவுறுத்தல், வங்கியாளர்களின் கடமைகளும் பொறுப்புக்களும், முகவரொருவராக வங்கியாளரின் வகிபாகம், நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் பொருள் ஒப்படைக்கப்பட்டவர், பின்னுரிமை

(நியமனங்கள் மற்றும் மரண சாதனங்கள், மரண சாதனமல்லா பின்னுரிமை மற்றும் இறுதி விருப்பாவணம்)

(ஆ) கைமாறத்தக்க சாதனங்கள்: வரைவிலக்கணங்கள், தரப்பினரின் பொறுப்புக்கள் மற்றும் காசோலைகள் (கைமாறத் தகுந்தவை, குறுக்குக் கோடிட்டவை, மாற்றத்தக்கவை போன்றன)

(இ) இலத்தரனியல் கொடுக்கல்வாங்கல்கள்: இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்களை அங்கீகரித்தல், காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு, சில்லறைக் கொடுப்பனவு முறைமை, பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள்

(ஈ) பிணையங்கள்: வகை (அசையக்கூடியது/ அசைவற்றது) பிணையங்களை ஆவணப்படுத்தல்

(உ) படுகடன் அறவிடல்: ஈட்டு விடயங்கள், படுகடன் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் வங்கிகளின் கடன்கள் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

(ஊ) நுகர்வோர் பாதுகாப்பு: சட்ட ரீதியான மீட்புக்கள், பொதுவான சட்ட மீட்புக்கள் மற்றும் நிறுவன ரீதியான/ நிருவாக ரீதியான ஒழுங்குகள்

(எ) உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளும் தேவைப்பாடுகள்: பணம் தூயதாக்கல் நடைமுறைகள்/ மாதிரி முறைகள், பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் சட்டங்களுடன் தொடர்பான சட்டங்கள், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் அடிப்படை ஏற்பாடுகள் நிதியியல் உளவறிதல் மற்றும் நடைமுறைகள், உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளர்களை நுணுகி ஆராய்தல் நடைமுறைகள் மற்றும் உலகளாவிய நியமங்கள் மற்றும் கண்காணிப்பு (நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்கள்)

## 5. பொருளாதாரத் தத்துவங்கள் (விருப்பத்திற்குரியது)

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

வங்கித்தொழில் மற்றும் நிதி வியாபாரங்களும் பொருளாதார நடவடிக்கைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டனவாகவும் ஒன்றின் மீது ஒன்று தங்கியிருப்பதாகவும் காணப்படுவதனால், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணத்துவ வாடிக்கையாளர்களின் பொருளாதார நடத்தைகளையும் பொருளாதாரத்தினையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். மேலும், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் வியாபாரங்கள், பொருளாதாரத் தத்துவங்கள் பிரயோகிக்கப்படவிருக்கும் பொருளாதார நடவடிக்கைகளின் பகுதியொன்றாக இருக்கும். எனினும், பொருளாதாரம் ஒரு பரந்தபாடமாக இருப்பதுடன் தொழில்சார் நிபுணத்துவத்தினையும் வழங்குகிறது. பாரிய வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் வியாபாரம் தொடர்பான தீர்மானங்களுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் பொருளாதார ஆராய்ச்சிக்காக ஒரு சில பொருளியலாளர்களைப் பணிக்கமர்த்துவது வழமையான நடைமுறையாக இருந்து வருகிறது. ஆகவே, இப்பாடமானது, நுண்பாக மற்றும் பேரண்டப் பொருளாதாரங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தத்துவங்கள், பன்னாட்டுப் பொருளாதாரம், வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆரம்ப மட்டங்களில் பொருளாதாரப் பகுப்பாய்வு என்பனவற்றில் அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அடிப்படைப் பொருளாதாரத் தத்துவங்களை விளங்கிக் கொள்வது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கு அவர்களது பதவியில் முன்னேற்றமடைவதற்கு அளப்பரிய விதத்தில் உதவும்.

### II. விதந்துரைக்கப்பட்ட பாட உள்ளடக்கம்

(அ) பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடு: பொருளாதார மூலவளங்கள், அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் (அருமைத்தன்மை மற்றும் தெரிவு) அமையச் செலவு, அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகள் (உற்பத்தி மற்றும் பயன்பாடு)

(ஆ) நுண்பாகப் பொருளாதாரம்: நுகர்வோர் நடத்தை (பயன்பாடு, வேறுபாடற்றதன்மை, எடுத்துக்காட்டப்பட்ட முன்னுரிமை, கேள்விக் கோட்பாடு, கேள்வி நெகிழ்ச்சி மற்றும் அதன் பிரயோகம்) உற்பத்தியாளர் நடத்தை (உற்பத்தி, உற்பத்தித்திறன், செலவு மற்றும் இலாபத்தினை உச்சப்படுத்தல்; வழங்கல் கோட்பாடு) சந்தைப் பொறிமுறை மற்றும் அரச தலையீடு, சந்தை அமைப்புக்கள் (நிறைபோட்டி, தனியுரிமை, நிறையில் போட்டி - தனியுரிமைப் போட்டி மற்றும் சிலருரிமை)

(இ) பேரண்டப் பொருளாதாரம்: வருமானச் சுற்றுப்பாய்ச்சல், உற்பத்திக் கோட்பாடு மற்றும் உற்பத்திகளின் மதிப்பீடுகள், வருமானம் மற்றும் செலவிடல், நுகர்வு, முதலீடு, சேமிப்பு, அரச வரவு செலவுத்திட்டம்

(ஈ) பேரண்டப் பொருளாதார இயக்கச் சமநிலை: தேசிய வருமானத்தினை அடையாளம் காணுதல், வருமான இயக்கச் சமநிலை மற்றும் வருமானப் பெருக்கி, முதலீட்டுச் சேமிப்பு மற்றும் திரவ முன்னுரிமை/ பண நிரம்பல் இயக்க சமநிலைக் கட்டமைப்பு மற்றும் வருமானம் மற்றும் செலவிடல் மீதான நாணய மற்றும் இறைக்கொள்கைகளின் தாக்கம்

(உ) பன்னாட்டுப் பொருளாதாரம்: பன்னாட்டு வர்த்தகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் (வணிக மயப்படுத்துதல், உண்மையான அநுகூலங்கள், ஒப்பீட்டு ரீதியான அநுகூலங்கள், ஹொஸ்ரோ மற்றும் ஹெஹாட் - டொமர் மற்றும் புதிய நோக்குகள்) சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு (நடைமுறைக் கணக்கு, மூலதன நிதியியல் கணக்கு மற்றும் நிதியிடல்) செலாவணி வீத அமைப்புக்கள், பன்னாட்டு ஒதுக்குகள், பன்னாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களின் மீதான செலாவணிக் கட்டுப்பாடுகளை தாராளமயப்படுத்துதல்

(ஊ) பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி: ஹொஸ்ரோ மற்றும் ஹெஹாட் - டொமர் போன்றவர்களின் கொள்கைகள்/ கோட்பாடுகள், வியாபாரச் சுற்றுவட்டம், வளர்ச்சிக் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் (ஏற்றுமதி ஊக்குவிப்பு, இறக்குமதிப் பதிலீடு, வெளிநாட்டு முதலீடுகள், வியாபார மையங்கள், கரைகடந்த நிதியியல் மையங்கள்) உலக வங்கியினதும் ஆசிய வங்கியினதும் வகிபாகம்

(எ) முதன்மைப் பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்: பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி வீதம், தலைக்குரிய வருமானம், சேமிப்பு மற்றும் முதலீட்டு விகிதம், இறைப் பற்றாக்குறை மற்றும் அரச படுகடன் விகிதம், தொழிற்படை மற்றும் தொழிலின்மை, சமமற்ற வருமானப் பங்கீடு, சென்மதி நிலுவை, நடைமுறைக் கணக்கு நிலுவை

(ஏ) சுதந்திரமடைந்ததிலிருந்து இலங்கையின் பொருளாதாரத்தினைப் பகுப்பாய்வு செய்தல்: முக்கியமான போக்குகள், கொள்கை மாற்றங்கள், நடுத்தர கால தோற்றப்பாடு மற்றும் சவால்கள்

## 6. வங்கியல்லா நிதியியல் வியாபாரம் (விருப்பதிற்குரியது)

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

நிழல் வங்கித்தொழில் என அறியப்படுகின்ற வங்கியல்லா நிதி வியாபாரமானது, வாடிக்கையாளர்களுக்கு பல்வேறுபட்ட குறிக்கோள்களுடன் அவர்களது நிதி முகாமைத்துவத்தினையும் வேறுபட்ட அளவுகளில் இடர்நேர்வுகளுக்கு முகம் கொடுப்பதற்கு அவர்களை இயலச்செய்வதற்குமாக நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் பணிகளை உள்ளடக்குகிறது. அத்தகைய நிறுவனங்களின் வகைகள், நிதியியல் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளைப் பொறுத்து நாட்டிற்கு நாடு வேறுபடும். வங்கிகளைக் போலன்றி, இந்நிதியியல் நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்படுவதுடன் பெரும் எண்ணிக்கையான வியாபார மாதிரிகளையும் தொழிற்படுத்துகின்றன. இந்நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேமிப்பு, நிதியிடல், முதலீடுகள், கொடுப்பனவுகள், முதலீட்டுப் பணிகள், சந்தைப் பணிகள் மற்றும் இடர்நேர்வு உள்ளடக்கம் ஆகிய பணிகளை வழங்குவதில் சிறப்பியல்பு கொண்டனவாக விளங்குகின்றன. ஆகவே, இப்பாடம் வங்கித்தொழில் துறைக்கு துணை நிரப்பியாக அல்லது போட்டியாக விளங்கும் முக்கிய நிதியியல் வியாபாரத் துறைகள் பற்றி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கு அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. எனினும், நீண்ட காலச் செயற்றிட்டக் கடன் வழங்கல் வியாபாரத்திலுள்ள முக்கியமான வங்கியல்லா நிதியியல் மற்றும் அபிவிருத்தி நிதியாக விளங்கும் முதலீட்டு வங்கித்தொழிலானது பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதி டிப்ளோமாவின் கீழான நிகழ்ச்சித்திட்டத்தில் அவற்றின் குறித்துரைக்கப்பட்ட வியாபார முக்கியத்துவம் கருதி தனியான பாடங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

### II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) நிதி வியாபாரம்: நிதிக் கம்பனிகள் மற்றும் அவற்றின் வியாபார சாதனங்கள் (தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள், உண்மைச் சொத்து, தவணைக் கொள்வனவு, அடகுபிடித்தல், தவணைக் கடன்கள்), ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகள் (உரிமம் வழங்குதல், மூலதன நிதியம், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம், குறைந்தபட்ச மைய மூலதனம், அமைப்பியல் மாற்றங்கள், அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள், தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை, கடன் வழங்கல், முதலீடுகள், திரவச் சொத்துக்கள், வைப்புக்கள், பணிப்பாளர் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள், வட்டி வீதங்கள், கம்பனி ஆளுகை, பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி பற்றிய மதிப்பீடுகள், விளம்பரங்கள், வைப்புக்

காப்புறுதி)

(ஆ) நிதி குத்தகைக்குவிடும் வியாபாரம்: குத்தகைக்குவிடும் கம்பனிகள் (குத்தகைக்குவிடுதல் தொடர்பான தொழிற்பாட்டு வாய்ப்புக்கள், வாக்குறுதிச் சான்றிதழுடான கடன்பாடுகள்) ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகள்

(இ) கொடுப்பனவு பணிகள் வியாபாரம்: அட்டைக் கொடுப்பனவுகள், செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவுகள், பணவனுப்பல் முகவர்கள், நாணய மாற்றுநர்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகள்

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள்: வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், உறுப்பினர்களுக்கான கடன் வழங்கல், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் முக்கிய ஏற்பாடுகள் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு

(உ) அடகுபிடித்தல் வியாபாரம்: அடகுபிடித்தல் நடைமுறைகள், பதிவு செய்தல் தேவைப்பாடுகள், தங்க சந்தையின் போக்குகள்

(ஊ) பிணையங்கள் சந்தை பணிகள் வியாபாரம்: பரிவர்த்தனைகள், பணத்தரகர்கள், பங்குச் சந்தைத் தரகர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், பங்குச் சந்தையில் கடன் வசதி ஏற்பாட்டாளர்கள், காரணிப்படுத்தல் கம்பனிகள், ஒப்புறுதியாளர்கள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், பிணையங்களின் வைப்பாளர்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகள் (உரிமம் வழங்கல், பரிவர்த்தனைக்கான குறைந்தபட்ச தேறிய மூலதன மற்றும் திரவ மூலதனத் தேவைப்பாடுகள், பங்குத்தரகர்கள், கூறுநம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் கொடுகடன் தரமிடல் முகவர்கள், இரகசிய தகவல்களைப்பெறும் நிலையிலுள்ள உள்ளிருப்பவர்களின் வர்த்தகப்படுத்தலை தடை செய்தல், இழப்பீட்டு நிதியம், பணத் தரகுத்தொழில் மீதான ஒழுங்குவிதிகள்)

(எ) துணிகரத் தொழில்முயற்சி மூலதனக் கம்பனிகள்: புதிய தொழில்முயற்சியாளர்களுக்கான ஆரம்ப மூலதனத்திற்கான ஏற்பாடுகள், வியாபார முகாமைத்துவம் இலாபநிலையொன்றில் பட்டியலிடப்படுகின்ற தொழில்முயற்சிகளினூடாக இடர்நேர்வுகளை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் முதலீடுகளை அறவிட்டுக் கொள்ளுதல் நாடுகளிலும் முக்கியமான பொருளாதாரங்களிலும் துணிகரத் தொழில்முயற்சி மூலதனங்கள் வெற்றி பெற்ற வரலாறுகள்

(ஏ) காப்புறுதி வியாபாரம்: பொதுவான, ஆயுள் மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட சாதனங்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகள்

(உரிமம் வழங்குதல், சட்ட ரீதியான கடன்தீராற்றல் அளவு, குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம், பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கான தொழில்நுட்ப ஒதுக்கங்கள், நீண்ட காலக் காப்புறுதி நிதியம், அரச பிணையங்களிலுள்ள முதலீடுகள்)

## 7. நிதியியல் வாடிக்கையாளர் முகாமைத்துவம் (விருப்பத்திற்குரியது)

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் வியாபாரம் முக்கியமாக வாடிக்கையாளரின் நம்பிக்கையிலும் நம்பகத்தன்மையிலுமே தங்கியிருக்கிறது. வாடிக்கையாளர் நம்பிக்கையில் ஏற்படக்கூடிய பாதிப்பு, வங்கித்தொழில்/ நிதியியல் நெருக்கடிகளில் காணப்பட்டதனைப் போன்று பெருமளவிற்கு பரவக்கூடிய தன்மையினைக் கொண்டிருப்பதனால் வாடிக்கையாளர் நம்பிக்கையில் ஏற்பட்ட பாதிப்பு தனிப்பட்ட நிறுவனங்களினதும் அதேபோன்று பல நிறுவனங்களினதும் முறிவிற்கு சங்கிலி போன்று தொடர்ச்சியாக வழிவகுக்கும். மறுபுறத்தில், வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வெவ்வேறுபட்ட இடர்நேர்வு ஆர்வத்திற்கு பொருந்தத்தக்க விதத்தில் மேலும் குறிப்பாகத் தேவையான உற்பத்திகளை வழங்குவது வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு அவசியமானதாகும். ஆகவே, வாடிக்கையாளர்களுக்குப் பணிகளை வழங்குவதற்கு ஒழுக்க ரீதியான நியமங்களும் சந்தைப்படுத்தல் நடைமுறைகள், மனித மூலவள ஊழியர் முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு என்பன தேவைப்படுகின்றன. பெரும்பாலான வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரையில், இலாபத்தினை நோக்கமாகக் கொண்ட வாடிக்கையாளர் முன்னுரிமைகளைக் கையாள்வதன் காரணமாக இல்லாத சாதனங்கள் விற்பனை செய்வது அநேக கீர்த்தி வாய்ந்ததும் சட்ட ரீதியானதுமான பிரச்சனைகளுக்கு வழிவகுத்திருக்கிறது. ஆகவே, நிதியியல் நிறுவனங்களின் நீண்ட கால உறுதிப்பாட்டிற்கு வாடிக்கையாளர் தொடர்பிலான ஊழியர்களின் ஒருமைப்பாடு ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். வாடிக்கையாளர் முகாமைத்துவம் பல்வேறு இடர்நேர்வு ஆர்வங்களுடன் கூடிய வாடிக்கையாளர்களை கையாள்வதற்கு நடைமுறை ரீதியான அலுவல்கள், கடப்பாடுகள் மற்றும் அனுபவம் என்பன தேவைப்படுவதுடன் இவற்றினைப் பாடநூல்களின் மூலமாக முழுமையாக கற்பிக்கவும் முடியாது. எனினும், பாடநூலினை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் தத்துவங்கள், நடைமுறைகள், விடய ஆய்வுகள் மற்றும் பயிற்சியாளர்களின் நோக்கு என்பன தொடர்பான அறிவினை வழங்கமுடியும். ஆகவே, இப்பாடமானது, நிதியியல் வாடிக்கையாளர்களை முகாமைப்படுத்துவது தொடர்பான மூலக்கூறுகள் பற்றி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கு அறிவினையும் அவர்களது சிறந்த செயலாற்றம் மற்றும் தொழில்

வழங்குகின்ற நிறுவனங்களின் சந்தைப் பங்குகளை ஊக்குவிப்பது ஆகிய இரண்டு ஈடுபாடுகள் தொடர்பிலுமான அவர்களது நம்பிக்கையினைப் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) நிதியியல் வாடிக்கையாளர்களின் வகைகள்: வைப்பாளர்கள், முதலீட்டாளர்கள், கொடுப்பனவுப் பணி வாடிக்கையாளர்கள், அவர்களது இடர்நேர்வு தொடர்பான ஆர்வம், (இடர்நேர்வு தவிர்ப்பு, இடர்நேர்வு-விருப்பம்) மற்றும் வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் தொடர்பிலான அவர்களின் பொறுப்புக்கள்

(ஆ) வாடிக்கையாளர் நம்பிக்கை முகாமைத்துவம்: வியாபாரம் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கான நிதியியல் வியாபாரத்தில் வாடிக்கையாளரின் நம்பகத்தன்மை/ நம்பிக்கையின் முக்கியத்துவம், நுகர்வோர்/ வாடிக்கையாளர் தேர்வு மற்றும் போட்டிச் சந்தைகளில் இறைமை, வாடிக்கையாளர் உறவுமுறைகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் பேணுவதிலுள்ள காரணிகள், வாடிக்கையாளர்களைக் குறிப்பாகக் கொண்ட சாதனங்கள் (கருமபீடச் சாதனங்கள்) மற்றும் திறந்த/ பொதுவான சாதனங்கள், புத்தம் புதிய/ சிக்கலான சாதனங்கள் மற்றும் இடர்நேர்வுகள் உற்பத்தி மாதிரிகள் மற்றும் விபரங்கள் மற்றும் இடர்நேர்வுகள் உற்பத்தி மாதிரிகள் மற்றும் விபரங்கள் மற்றும் சாதனங்களின் இடர்நேர்வுகளின் ஒழிவுமறைவற்ற வெளிப்படையானதன்மை, உடன்படிக்கைகளையும் ஆவணங்களையும் கையெழுத்திடுதல்

(இ) நிதியியல் சாதனத்தினை சந்தைப்படுத்தல்: சந்தைப்படுத்தல் தத்துவங்கள், சந்தைப்படுத்தல் கலப்பு (சாதனம், ஊக்குவிப்பு, விலை, வாடிக்கையாளர், பௌதீகத் தோற்றம், செயன்முறைப்படுத்தல், இடங்கள் போன்றவை) சந்தைப்படுத்தல் திட்டத்தின் கூறுகள் (குறிக்கோள், இலக்குகள், சூழலியல் ரீதியான பகுப்பாய்வுகள் மற்றும் பெறுமதிச் சங்கிலி ஆய்வுகள், சந்தைப்படுத்தல் உபாயங்கள், திட்ட நடைமுறைப்படுத்தல்) சந்தை வழிப்படுத்தல்கள் (சொந்த, வெளிமூலங்களிலிருந்து பெறல், விளம்பரம், விலைப்பாரபட்சங்கள், மேலதிக வசதிகளுடன் கூடிய வாடிக்கையாளர் ஊக்குவிப்புக்கள், பொருட்காட்சிகள், முகவர்கள்/ விநியோகஸ்தர்கள், இணையத்தளம்/ மின்னஞ்சல்/ சமூக ஊடகத்தினை அடிப்படையாகக் கொண்ட முறைகள் போன்றவை) சந்தை ஆராய்ச்சி (வாடிக்கையாளர் திருப்தி, புதிய சாதனங்கள் மற்றும் சந்தைப் பங்கு) ஆராய்ச்சி முறைகள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளைத் திரட்டுதல்

(ஈ) வாடிக்கையாளர் பணிகளை வினைத்திறனுடன் வழங்குவதற்காகவும் வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் நம்பிக்கையினையும் உறுதிப்பாட்டினையும் மேம்படுத்துவதற்காகவும் மனித மூலவள முகாமைத்துவத்தினை பிரயோகித்தல்: வாடிக்கையாளர்களுக்கு அல்லது ஊழியர்களுக்கான நிறுவனங்களின் முன்னுரிமை, வாடிக்கையாளர் மற்றும் நிறுவன ரீதியான முகாமைத்துவத்திற்கான வியாபார வழிகளை அடிப்படையாகக் கொண்ட மனிதவலு மதிப்பீடு, வேலை விபரணங்கள் மற்றும் ஒழுக்கநெறி சார்ந்த நிதியியல் சாதனங்களை வழங்குவதற்கான அர்ப்பணிப்பு, தொழில்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவுச் செயன்முறை, ஊழியர் ஈடுபாடுகள், முதலீடு (பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி - தகுதி, இடைவெளிப்பகுப்பாய்வு மற்றும் பதவித் திட்டமிடல் ஆதரவு, ஊதிய முறைகள்) தொடர்ச்சியான திட்டமிடல், செயலாற்ற மதிப்பீட்டு முறைமைகள், உற்பத்தித்திறன் கோட்பாடு மற்றும் அளவுமுறைகள், மனக்குறைகளைக் கையாளுதல் மனிதவள ஆலோசனை வழிமுறைகள், குழும ரீதியான வேலை மற்றும் தனிப்பட்ட ரீதியான பொறுப்புக்கள், தொழில் ஒருமைப்பாடு மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல், ஒழுக்காற்று நடைமுறைகள், ஓய்வு மற்றும் சேம நிதியங்கள், கைத்தொழில், சமாதானம் மற்றும் செலவுகளுக்கான தொழில் உறவுகள் மற்றும் தொழில் சங்கங்கள் நிதியியல் பணிகள் கைத்தொழிலுடன் தொடர்பான அவற்றின் செலவுகள் மற்றும் நன்மைகள் அடிப்படையிலான தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள், அவற்றின் பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகள், தொழில் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்திறன், வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளுதல்

(உ) வாடிக்கையாளர் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள்: நம்பகத்தன்மையான பொறுப்புக்கள், நிதியியல் சாதன இடர்நேர்வுகளின் விழிப்புணர்வு, சாதனங்களின் தவறான விற்பனையினைத் தவிர்த்தல், வாடிக்கையாளர்களினது தகவல்களின் இரகசியத்தன்மை, நியாயச் சந்தை நடைமுறைகள், சிலருரிமைச் சந்தை அமைப்பு எதிர் போட்டி அல்லது ஒருங்கிணைத்தல்கள், பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் திட்டங்கள் (வங்கிகளுக்கான வாடிக்கையாளர் சாசனம், அரச பிணைகளிலுள்ள முதனிலை வணிகர்கள், வைப்புக் காப்புறுதி, இழப்பீட்டு நிதியம், வாடிக்கையாளர் பாதுகாப்புச் சட்டத்திலுள்ள அடிப்படை ஏற்பாடுகள் நிதியியல்/ காப்புறுதி ஆலாட்சி அதிகாரிகளின் திட்டம் நியாயாதிக்க நடைமுறைகள்)

## 8. வியாபாரக் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல் (விருப்பத்திற்குரியது)

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

வங்கித்தொழில் மற்றும் நிதி வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கணிக்கப்படுகின்ற எண்ணிக்கை தொடர்பான பாரிய இலக்கங்களுடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன. சாதனங்களின் விலையிடல் நிதிகளின் விற்பனை குறிப்பாக கணிதவியல் மற்றும் புள்ளிவிபரங்களின் பிரயோகங்களைத் தேவைப்படுத்துகின்றது. புதிய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் வங்கிகளிலுள்ள மூலதனம் மீதான ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் கீழ் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் வியாபார உபாயங்கள் மற்றும் இடர்நேர்வுப் பெறுமதிகளை நிர்ணயிப்பதற்கும் ஏராளமான இடர்நேர்வு மாதிரிப்படுத்தல் பயிற்சிகள் அவசியமாகவுள்ளன. மேலும், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்கள், கணியம்சார் தொழில்நுட்பங்களுடன் தொடர்புபட்டுள்ள நிதியியல் சந்தைகள் மற்றும் முதலீடுகள் மீதான ஆராய்ச்சியின் அர்ப்பணிப்புமிக்க தொழிற்பாடுகளைப் பேண வேண்டியிருக்கும். எனினும், நிதியியல் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல் என்பன உயர்ந்த நுணுக்கமும் சிக்கலும் கொண்டனவாக இருப்பதனால் நிதியியல் தொடர்பாக சிறந்த பின்னணியைக் கொண்ட கணிதவியலாளரால் மாத்திரமே இதில் பாண்டித்தியம் பெறமுடியும். இதன் விளைவாக, உயர்ந்தளவு கொடுப்பனவுகளைக் கொண்ட வங்கித்தொழில் மற்றும் நிதிசார் நிபுணத்துவத் துறைகளில் கணிதவியல் நிபுணர்கள் ஆதிக்கம் செலுத்துவதுடன் “நிதியியல் பொறியியல்” பாடமும் இத்துறையில் உருவாகியிருக்கிறது. ஆகவே, இப்பாடமானது கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியலின் அடிப்படைத் தத்துவங்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களில் அவற்றின் பிரயோகம் என்பனவற்றில் மாத்திரம் அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் அவர்களது வியாபாரத்தில் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல் பிரயோகங்கள் தொடர்பில் வங்கித்தொழில் மற்றும் நிதியியலில் தொழில்சார் நிபுணர்கள் பரீட்சயமடைந்து கொள்ளச் செய்வதனையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

### II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) தரவு சேகரிப்பு முறைகளுக்கு அறிமுகம்: தரவு மற்றும் தகவல்கள், தரவின் வகை, தரவின் மூலம், குடித்தொகை மற்றும் அதன் மாதிரி, மாதிரிப்படுத்தும் முறைகள்

(ஆ) தரவினை சமர்ப்பித்தல்: கால இடைவெளி அட்டவணைகள், வரைபடம்

(இ) இலக்க விவரண வழிமுறைகள்: மத்திய சார்புப் போக்கு, பிரிகை

(ஈ) அடிப்படை நிகழ்தகவு: நிகழ்தகவு பற்றிய அறிமுகம், வழமையான விநியோகம்

(உ) வழமையான விநியோகத்தினைப் பயன்படுத்தி நம்பிக்கை இடைவெளி மதிப்பீடு

(ஊ) அனுமானப் பரீட்சிப்பு அடிப்படைகள்: அனுமானப் பரீட்சிப்பு பற்றிய அறிமுகம் $\Sigma$ என்ற கணிதக் குறியீடு காணப்படுமிடத்து அனுமானங்களைப் பரீட்சித்தல்

(எ) சமன்பாடு பின்னோக்கிய பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல்: இலகுவான சமன்பாடு பின்னோக்கிய மாதிரி. பல் பின்னோக்கிய மாதிரி, நேரத் தொடர் பகுப்பாய்வுகள் தொடர்புபட்ட வரைவிலக்கணம் மற்றும் வழிமுறைகள்

(ஏ) மாதிரிகளின் அறிமுகம்

(ஐ) சுட்டெண்களை அமைத்தல்: சுட்டெண்களின் கணியம், விலைகளின் சுட்டெண் மற்றும் சுட்டெண்களையும் பிரச்சனைகளையும் பிரயோகித்தல்

(ஒ) தெரிவு செய்யப்பட்ட நிதியியல் பிரயோகங்கள்: முறி விலையிடல் விளைவு வளையிகளை மதிப்பிடல், தற்போதைய மதிப்பீடுகளைக் கணித்தல், முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வருவாய்களில் எதிர்பார்க்கப்படும் வருவாய் விகிதம், பாசல் III கொடுகடன் இடர்நேர்வு மாதிரி, தேர்வுக்குரிய விலையிடல்

(ஓ) பகுப்பாய்வு அறிக்கையினை எழுதுதல்: வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகள் தொடர்பான புள்ளிவிபரவியல் மாதிரிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒரு சில விடய ஆய்வுகள்

# பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமாவிற்கான பாடநெறி

## கல்வியியல் தலைப்பு/ தகைமை: பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா

இப்பாடநெறியானது பெருமளவு நடைமுறைப் பயிற்சிகளையும், பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் இடைநிலை பாடநெறியின் கீழ் வழங்கப்பட்ட ஆரம்ப அறிவின் அடிப்படையாகக் கொண்ட வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொடர்பான சிறப்புப் பாடங்களையும் உள்ளடக்கியிருக்கும். இப்பாடநெறியிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவுடன் தொழில்சார் நிபுணர்களும் மாணவர்களும் பட்டப்படிப்பினையும் பட்டப்பின்படிப்பினையும் தொடரமுடியுமென்பதுடன் சிறப்புத் துறையில் பெற்ற உயர்ந்த செயலாற்றத்தின் அடிப்படையில் பதவி உயர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும். இத்துறைகளானது பணம் மற்றும் நாணயக் கொள்கை, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி, நிதியியல் நிறுவனங்களின் முகாமைத்துவம், கொடுகடன் முகாமைத்துவம், நிதியியல் முகாமைத்துவம், நிதியியல் சந்தை தொழிற்பாடுகள், முதலீட்டு வங்கித்தொழில், மத்திய வங்கித்தொழில் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றையும் உள்ளடக்குகிறது. பிரயோக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் டிப்ளோமா தாரிகள் வங்கித்தொழில் மற்றும் நிதியின் எந்தவொரு துறையிலும் நுழைவதற்கும் எந்தவொரு பதவியையும் இலகுவாக வகிப்பதற்கும் முக்கிய தகுதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். இப்பாடநெறியானது 4 கட்டாய பாடங்களையும் 5 விருப்பத்திற்குரிய பாடங்களையும் உள்ளடக்கியிருக்கும். இவ்விருப்பத்திற்குரிய 5 பாடங்களில் 3 பாடங்களில் கட்டாயம் சித்தியடைதல் வேண்டும். பொதுநோக்கு, குறிக்கோள் மற்றும் பாடத்தின் உள்ளடக்கம் என்பன கீழே தரப்படுகின்றன.

### 1. பணப் பொருளாதாரமும் நாணயக் கொள்கையும்

#### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

நாணயக் கொள்கை என்பது வட்டி வீதங்கள், கொடுகடன் செலாவணி வீதங்கள், பிணைகளின் விலைகள் மற்றும் நாணயச் சந்தையின் திரவத்தன்மை போன்ற பணத்துடன் தொடர்புடைய காரணிகளினால் ஏற்பட்ட கொள்கை தூண்டல் மாற்றங்களின் செல்வாக்கிற்குட்பட்ட கூட்டுக் கேள்வி/ செலவினத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக பொருளாதாரத்தில் செல்வாக்கினைச் செலுத்துவதற்காக மத்திய வங்கியின் நாணய மேலாண்மையாளரினால் எடுக்கப்பட்ட பொதுவானதொரு கொள்கை நடவடிக்கையாகும். நாணயக் கொள்கையானது பேரண்டப் பொருளாதாரத்தின் பல்வேறு பரிமாணங்களையும் நிதியியல் உறுதிப்பாட்டுக் குறிக்கோள்களையும் கொண்டிருக்கிறது. வங்கித்தொழிலும் நிதியியல் சந்தைகளும் வட்டி வீதங்கள், சந்தைத் திரவத்தன்மை மற்றும் ஏனைய நாணய மற்றும் முன்மதியுடை ஒழுங்குவிதிகளின் மூலமாக நாணயக் கொள்கையினால் பெருமளவிற்கு வழிகாட்டப்படுவதுடன் அதன் செல்வாக்கிற்கும் உட்பட்டிருக்கின்றன.

பணத்தின் பெரும்பகுதி வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சந்தைகளின் வியாபாரத் தொழிற்பாடுகளினூடாகவே உருவாக்கப்பட்டு சுற்றோட்டப்படுத்தப்படுகின்றது. பணமானது வங்கித்தொழில் மற்றும் நிதி வியாபாரத்திற்கான முதன்மை உள்ளீடாக விளங்குகின்றது. ஆகவே, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சந்தைகளில் காலத்திற்குக் காலம் இடம்பெறும் நாணயக் கொள்கை நடவடிக்கைகளுக்கு அல்லது எதிர்பார்ப்புகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் தமது வியாபாரத் தொழிற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே, இப்பாடமானது, பொருளாதாரத்தில் நாணயக் கொள்கையினை கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிவினை வழங்குகின்ற விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இவை தொடர்பான அறிவானது வங்கித்தொழில் மற்றும் நிதியியலிலுள்ள தொழில்சார் நிபுணர்கள் தாம் தொழில்புரியும் நிறுவனங்களுக்குப் பங்களிக்க அளப்பரிய முறையில் உதவும்.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்:

(அ) பணத்தின் பரிணாம வளர்ச்சி, பண்டமாற்ற முறைமை, பண்டப் பணம், தங்க நியமம், வங்கித் தாள்கள், கட்டளைப் பணம், இலத்திரனியல் பணம் உண்மையான பணம்

(ஆ) பணத்தின் தொழிற்பாடு மற்றும் பணம் தொடர்பாக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் வியாபாரம்: பணத்தின் தொழிற்பாடுகள் அதாவது பரிமாற்ற ஊடகம், கணக்கின் அலகு, செல்வத்தின் திரவச் சேமிப்பு, பிற்போடப்பட்ட கொடுப்பனவு முறைமை மற்றும் இத்தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் நிதியியல் பணிகளை வழங்குதல்

(இ) பணத்தின் பொருளாதார வகிபாகம்: மூலவள மாற்றல்கள் (சேமிப்பாளரிடமிருந்து முதலீட்டாளருக்கு) நாணய மயப்படுத்தல் மற்றும் முடுக்கி, விலைப் பொறி முறை மற்றும் சந்தைகள், பொருளாதார வினைத்திறன்

(ஈ) பணநிரம்பலைக் கணித்தல்: $M_1$, $M_2$, $M_{2b}$ மற்றும் $M_4$ மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்

(உ) பணத்திற்கான கேள்வி: கொடுக்கல்வாங்கல்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் ஊகக் கேள்வி, கேள்வியைப் பாதிக்கும் காரணிகள், உண்மைச் சமநிலைக்கான கேள்வி, திரவத்தன்மைக்கான முன்னுரிமை மற்றும் திரவத்தன்மைப் பொறி

(ஊ) பணத்தின் உருவாக்கம்: தளப் பணம், வைப்புக்கள் மற்றும் கொடுகடன் பணம்/ கொடுகடன் பெருக்கி தொடர்பான பகுப்பாய்வு, நாணய அளவீடு, பணநிரம்பலை நிர்ணயிக்கின்ற காரணிகள்

(எ) வட்டி வீதங்களை நிர்ணயித்தல்: வட்டி வீதங்களின் வகிபாகம், கடனை நிர்ணயிக்கத்தக்க நிதியங்களின் சந்தைக் கோட்பாடு, திரவத்தன்மை முன்னுரிமைக் கோட்பாடு, இடர்நேர்வு மற்றும் வட்டி வீதங்களின் கால அமைப்பு, சந்தை வட்டி வீதங்கள் மீதான கொள்கை வீதங்களின் தாக்கம், சந்தை வட்டி வீதங்கள் மற்றும் அடித்தள அளவுக்குறியீட்டு வீதங்கள்

(ஏ) பணத்தின் கணிய அளவுசார் கோட்பாடு மற்றும் பொருளாதாரத்தின் மீது பணத்தின் தாக்கம்

(ஐ) நாணயக் கொள்கையும் நடைமுறைப்படுத்தலும்: இலக்குகள் (ஒற்றை, இரட்டை மற்றும் பல) விலை/ பொருளாதார உறுதிப்பாடு இதன் பேரண்ட முன்மதியுடைய பகுப்பாய்வு, சாதனங்கள், பரிமாற்றுப் பொறிமுறை, சந்தைத் திரவத்தன்மை முகாமைத்துவம், இலக்குகள், (நாணயம், பணவீக்கம், பெயரளவு மொ.உ.உற்பத்தி போன்றவை) முன்னோக்கிய வழிகாட்டல் அணுகுமுறை, மரபுவழி சார்ந்த, மரபுவழி சாராத கொள்கைகள், தொடர்பூட்டல் உபாயங்கள் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள், நாணயக் கொள்கையையும் இறைக் கொள்கையையும் இணைத்தல்

(ஒ) நாணயக் கொள்கையின் தாக்கம்: பெயரளவு மற்றும் உண்மையான தாக்கம், சொத்துக்களின் விலைக் குமிழிகள் மற்றும் வங்கித்தொழில் நிதியியல் தொழில்துறையில் அதன் தாக்கம்

(ஓ) இலங்கையில் அண்மைய நாணயக் கொள்கையின் போக்குகள்: நாணய விதிச் சட்டத்தில் இது தொடர்பான ஏற்பாடுகள், கடந்த இரண்டு தசாப்தங்களில் நாணயக் கொள்கைச் சுற்றுவட்டம், சாதனங்களும் இலக்குகளும்

(ஔ) ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யப்பானில் அண்மைய உலகளாவிய நாணயக் கொள்கை போக்குகள்: கடந்த இரண்டு தசாப்தங்களாக நாணயக் கொள்கை சுற்றுவட்டம், வட்டி வீதங்களை நிர்ணயிக்கின்ற பொறிமுறை, கணிசம்சார் தளர்த்தல்கள், கொள்கைகள், மரபுவழி சாராத நாணயக் கொள்கைகள் மற்றும் அடிப்படைக் குறிக்கோள்கள், நாணயக் கொள்கை மீதான நடைமுறைச் சந்தை எதிர்பார்ப்புக்கள்

## 2. நிதியியல் முகாமைத்துவம்

### I. பாட பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

நிதியியல் முகாமைத்துவம் என்பது அடிப்படையில் கம்பனியின் நிதியத்தினையும் இலாபத்தன்மை, பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மை ஆகியவற்றின்

அடிப்படையில் எவ்வாறு முகாமைப்படுத்தப்படுகிறது என்பதனையும் பற்றியதாகும். இது வருவாய்கள்/ நன்மைகள் என்பன மீதான இலக்குகளைக் கருத்திற் கொண்டு நிதியியல் பாய்ச்சல்களின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தில் ஈடுபடுகிறது. கம்பனி நிதி அல்லது திறைசேரி/ நிதி முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள் பொதுவாக இப்பாடத்திற்குள் வருகின்றன. தற்போதைய நிதியியல் உலகத்தில், நிதியியல் பொறியியற்படுத்தல் பெருமளவிற்கு உருவாகியிருப்பதுடன் நிதியியல் முகாமைத்துவ துறையிலும் இடம்பெற்று வருகின்றது. நிதிகளை திரட்டுகின்ற சாதனங்கள், மூலதனம், திரவத்தன்மை முகாமைத்துவம், முதலீடுகள், நிதியியல் திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறல்கள் மற்றும் நிதியியல் மோசடிகளைத் தடுப்பதற்கான தொடர்புக் கட்டுப்பாடுகள் என்பன இப்பாடத்தின் முக்கிய துறைகளாகும். நிதியானது முன்மதியுடன் முகாமைப்படுத்தப்படாதுவிடின், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் உட்பட பல்வேறுபட்ட கம்பனிகள் அபகீர்த்திக்கும் முறிவுகளுக்கும் உட்பட்ட சம்பவங்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு ஓரிரவிற்குள்ளேயே எந்தவொரு நிறுவனமும் முறிவடைந்துபோகும். வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்கள் அவர்களது நிறுவனங்களை முகாமைப்படுத்துவதற்கும் அதேபோன்று அவர்களது கம்பனிகளுக்கும் உயர் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கும் நிதியியல் முகாமைத்துவப் பணிகளை வழங்குவதற்கும் இப்பாடம் தொடர்பான அறிவு அத்தியாவசியமானதாகும். நிதியியல் முகாமைத்துவப்பாடம் பெருமளவு கோட்பாடுகளும் அட்சர மற்றும் புள்ளிவிபரத் தன்மைகளையும், பகுப்பாய்வுகளையும் உள்ளடக்கியிருக்கும். எனினும், இப்பாடமானது, வங்கித்தொழில் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் இப்பாடத்தில் மேலும் சிறப்பு பயிற்சிகளை தொடர்வதனை இயலச்செய்யும் விதத்தில் அவர்களுக்கு நிதியியல் முகாமைத்துவம் தொடர்பான முக்கியமான அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) நிதிகளைத் திரட்டும் சாதனங்களும் செலவுகளும்: பங்குரிமை மூலதனம், மாற்றத்தக்கவைகள் மற்றும் உத்தரவாதங்கள், படுகடன் சாதனங்கள், பிணையமயப்படுத்தல்/ சொத்துக்களால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள், முடுக்கிக் கொள்வனவு, அவற்றின் செயன்முறைகள் மற்றும் செலவுகள்

(ஆ) சொத்து - பொறுப்பு முகாமைத்துவம்: திரவத்தன்மை இடர்நேர்வு, முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வு, காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம், திரவச் சொத்துக்கள் மற்றும் திரவத்தன்மை விகிதம், திரவத்தன்மையினை அதிகரித்தல் (சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் பொறுப்பு முகாமைத்துவம்), சொத்து பொறுப்புக் குழுப் பொறிமுறை, தொழிற்படு மூலதன முகாமைத்துவம், மூலதன வரவு செலவுத்திட்டம்

(இ) திறைசேரி மற்றும் சொத்துப்பட்டியல் முகாமைத்துவம்: நிதிகளின் வகைகள் (கட்டுக்காப்பு நிதியம், ஓய்வூதிய நிதியம், சேம நிதியங்கள், மிகை நிதியம் போன்றன) சொத்துப்பட்டியல்/ சொத்துக் கலப்பு தெரிவு செய்தல் உபாயங்கள், உலகளாவிய மற்றும் உள்ளூர் சந்தை முதலீட்டுச் சாதனங்கள், சொத்துக் கணக்கீடு (இலாபம்/ இழப்புச் சந்தைப் பெறுமதி, முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை, விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை போன்றன மற்றும் பெறுமதியிழப்பு நியமங்கள்) இடர்நேர்வு அளவு முறைகள் மற்றும் முகாமைத்துவம் (இடர்நேர்வில் பெறுமதி, முதிர்ச்சி இடைவெளி, வட்டி வீத இடைவெளி, நவீனமயப்படுத்தப்பட்ட காலம், அழுத்தப் பரீட்சிப்பு, பெறுதிகளின் பயன்பாடு, திறந்த நிலைமை வரையறைகள்) நிதிய முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளின் அமைப்பு (முன்னரங்க அலுவலகம், நடு அலுவலகம், பின்னரங்க அலுவலகம், கடமைகளை வெவ்வேறாகப் பிரித்தல்) சொத்துப்பட்டியல் மீதான வருவாய் (மூலதன இலாபம், பங்கிலாபம்/ வட்டி, சந்தைப்படி நிர்ணயிக்கப்பட்ட/ சந்தைப் பெறுமதி இலாபம் போன்றவை) அடித்தள அளவுக்குறியீட்டு வருவாய்

(ஈ) நிதியியல் பகுப்பாய்வு, திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறல்: இடர்நேர்வும் வருவாயும் நடுநிலையிலுள்ள புள்ளி, வரவு செலவுத்திட்ட நுணுக்கங்கள் (வியாபார வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது. நடவடிக்கை அடிப்படையானது, வியாபார/ தொழிற்பாட்டு இலக்குகள் போன்றவை) எதிர்கால காசுப்பாய்ச்சல் மதிப்பீடு, தவணைப் பெறுமதி/ பணத்தின் தற்போதைய பெறுமதி மற்றும் முன்னுரிமையளிக்கப்பட்ட நிதியியல் முடிக்கியின் அளவு, நிதியியல் செயலாற்ற எதிர்வுகூறல் (கடந்த கால செயலாற்றத்தின் மீதான புள்ளிவிபரவியல் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டது. ஏனைய மாதிரிகள் அல்லது விபரமான தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல், அழுத்தச் சூழல் பரீட்சிப்பு போன்றவை)

## 3. பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

பன்னாட்டு வர்த்தக வியாபாரத்தில் ஈடுட்டிருக்கின்ற வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வங்கிகளினால் வழங்கப்படுகின்ற பணிகள் அதிகளவிற்கு சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப் பணிகளாக இருக்கின்றன. எந்தவொரு திறந்த பொருளாதாரத்திலும் பன்னாட்டு வர்த்தகம் ஒரு மையப் பொருளாதார நடவடிக்கையாக விளங்குகின்றது. மரபு ரீதியாக, ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்குமிடையேயான கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு, வர்த்தக முகவர்களாக வர்த்தகத்தினை தீர்ப்பனவு செய்ய வங்கிகள் தேவைப்படுவதனால் பன்னாட்டு

வர்த்தகம் வங்கிகளினால் நிதியிடப்பட்டு வசதியளிக்கப்படுகின்றது. மேலும், வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வர்த்தகத் தொழிற்பாடுகளுக்கு நிதியிடுவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த கொடுகடன் வசதிகள் தேவைப்படுகின்றன. பன்னாட்டு வர்த்தகம் வேறுபட்ட நாணயங்களைக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பெறுகைகளுடன் தொடர்புபட்டனவாக இருப்பதனால் வெளிநாட்டுச் செலாவணிப் பணிகளையும் வங்கியிலிருந்து பெறவேண்டியிருக்கிறது. இதன்படி, வங்கிகள் பன்னாட்டு வர்த்தக வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் நிதியியல் பணிகளை வழங்கின. பன்னாட்டு வர்த்தகம் பெருமளவு ஒழுங்குமுறைப்படுத்தல் நடைமுறைகளுடனும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரக் கொள்கைகளுடனும் தொடர்புபட்டதாக இருந்தது. ஆகவே, இப்பாடமானது வர்த்தக நிதிப் பணிகள் மற்றும் வர்த்தகம் தொடர்பான உள்நாட்டு மற்றும் உலகளாவிய நடைமுறைகள் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய தொழில்நுட்ப அறிவுடன் வர்த்தகப் பணிகளை தொழில்சார் நிபுணத்துவத்துடன் ஆற்றுவதற்கு அவர்களுக்கு உதவியினை வழங்கும் விதத்தில் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கு அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி பற்றிய அடிப்படைப் பொருளாதாரம்: சென்மதி நிலுவை அமைப்பு, சென்மதி நிலுவை நிதியிடல் தேர்வுகள் (மத்திய வங்கி ஒதுக்கங்கள், வெளிநாட்டு மூலதனம்) செலாவணி வீத பொறிமுறைகள், நாணய மாற்றல்கள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகள் (நடைமுறை மற்றும் மூலதனம்) வர்த்தகக் கொள்கைகள் (தீர்வை மற்றும் தீர்வையல்லாக் கொள்கைகள், ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள் மற்றும் இறக்குமதிப் பதிலீடுகள்) பொருளாதார வளர்ச்சிக்கான பன்னாட்டு வர்த்தகத்தின் பொருளாதார முக்கியத்துவம், வருமானம், தொழில்நிலை மற்றும் உலகமயமாக்கலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

(ஆ) வர்த்தக ஆவணங்கள்: மாற்றுண்டியல், வார்நாமம், வர்த்தகப் பொருட்பட்டியல், பரிசோதனைச் சான்றிதழ், மூலச்சான்றிதழ், சரக்குக் காப்புறுதி, நன்மைபெறுநரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்

(இ) வர்த்தகக் கொடுப்பனவு முறை மற்றும் முறைமைகள்: ஆவணங்களின் சேகரிப்புக் கொடுப்பனவின் மீதான ஆவணம் மற்றும் ஏற்றுக்கொள்ளலின் மீதான ஆவணம், ஆவண ரீதியான கொடுகடன், திறந்த கணக்குகள், பொருட்களை அனுப்பும் கணக்குகள், முற்பணக் கொடுப்பனவுகள், சுவிப்ற், தொடர்பு வங்கிகள் மற்றும் நொஸ்ரோ/ வொஸ்ரோ கணக்குகள்

(ஈ) பன்னாட்டு வர்த்தக சம்மேளன ஒழுங்குவிதிகள் (பிந்திய பதிப்பு) ஆவணப்படுத்தல் கொடுகடனுக்கான ஒரே சீரான சுங்க மற்றும் நடைமுறைகள், ஆவண ரீதியான சேகரிப்புக்களுக்கான ஒரே சீரான விதிகள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக நியதிகள்/ ஒப்பந்தங்கள்

(மறைமுக நியதிகள்) பயன்பாட்டிற்கான ஒரே சீரான ஒழுங்குவிதிகள், ஆவணப்படுத்தல் கொடுகடனின் கீழ் ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கான பணவனுப்பல்களுக்கான ஒரே சீரான ஒழுங்குவிதிகள், கேள்வி உத்தரவாதங்களுக்கான ஒரே சீரான ஒழுங்குவிதிகள்

(உ) சுங்க நடைமுறைகள்: பொருட்களின் வகைப்படுத்தல்கள் மற்றும் இணங்குவிக்கப்பட்ட முறைமைகள், தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்கள், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அகற்றுதல், வரிகள்/ தீர்வைகளைக் கணித்தல் மற்றும் கொடுப்பனவு, பொருட்களுக்கு சுங்க வரி செலுத்தாது துறைமுகத்தில் வைத்திருத்தல் மற்றும் துறைமுகத்திலான வர்த்தகம், பிற்போடப்படும் வசதி

(ஊ) வர்த்தக நிதியிடல்: பட்டியல்களை கழிவிடல், பட்டியல்களைக் கொள்வனவு செய்தல், பெறத்தக்கவற்றிற்கு நிதியிடல், கப்பற்படுத்தலுக்கு முன்னான கொடுகடன் (பொதி செய்தலுக்கான கொடுகடன்) கப்பற்படுத்தலுக்குப் பின்னான கொடுகடன், வாக்குறுதி/ நம்பிக்கைப் பொறுப்பு பெறுகைகள் கடன்கள், ஏற்றுக்கொள்ளத்தக்கவை, வாங்குநர் கொடுகடன், தொழிற்படு மூலதனக் கடன்கள், ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி, பன்னாட்டு உத்தரவாதங்கள், முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதங்கள், விலைக்கோரல் முறிகள், செயலாற்ற முறிகள், நிதியியல் உத்தரவாதங்கள், நாணயக் கடிதங்கள் (துணைநில், உத்தரவாதம், மாற்றத்தக்கவை, மீள்சுழற்சி போன்றவை) எதிர்காலக் கடப்பாடுகளின் கொள்வனவு மற்றும் வங்கி உத்தரவாதப்பத்திரம்

(எ) வெளிநாட்டு நாணயப் பணிகள்: உடன் வாங்கல் விற்றல், முன்னோக்கிய வாங்கல் மற்றும் விற்றல், முன்னோக்கிய செலாவணி வீதங்களை நிர்ணயித்தல், வங்கிப் பணிகளை சேகரித்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல், வெளிநாட்டு நாணய கணக்குகள் (வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், பிணையங்கள் முதலீட்டாளர் கணக்குகள், வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள், நொஸ்ரோ போன்றன)

(ஏ) இலங்கையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் வரிகள்/ தீர்வைகள்: கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் மீதான செலாவணிக் கட்டுப்பாடுகளின் பொதுவான அனுமதிகள், ஏற்றுமதிப் பெறுகைகளை தாய்நாட்டிற்கு அனுப்புவதற்கான தேவைப்பாடுகளிலிருந்து விதிவிலக்கு, ஏற்றுமதி நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கொடுகடனின் அறவிடல், ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் மீதான வரிகள், செஸ் வரிகள் மற்றும் தீர்வை வீதங்கள் மற்றும் அவற்றின் குறிக்கோள்கள், இறக்குமதிகள் மீதான முற்பணக் கொடுப்பனவுகள், முன்னோக்கிய ஒப்பந்தங்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு இறக்குமதி உரிமம் மற்றும் கொடுப்பனவு ஒழுங்குவிதிகள்

(ஐ) பன்னாட்டு வர்த்தக ஒழுங்குகள் மற்றும் நியமங்கள்: பன்னாட்டு அமைப்புக்கள் மற்றும் முறைமைகள்: உலக வர்த்தக அமைப்பு (தீர்வை மற்றும் வர்த்தகம் மீதான பொதுவான உடன்படிக்கையிலிருந்தான தோற்றம் மற்றும் பரிணாமம், வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் உருகுவே சுற்று, குறிக்கோள்கள், குவித்தல் மற்றும் பதிலீடுகள் தொடர்பான உலக வர்த்தக அமைப்பு உடன்படிக்கைகள், இறக்குமதி உரிமம் வழங்கல், கப்பற்படுத்தலுக்கு முன்னான பரிசோதனைகள், வர்த்தகத் தடைகள், வர்த்தகப் பிணக்குகளுக்கு தீர்வு காணுதல், மூலவிதிகள், முன்னுரிமை/ சுதந்திரத வர்த்தகம் போன்றவை) பன்னாட்டு நாணய நிதியம் (தோற்றம், பிறெட்டன்வூட் முறைமை பரிணாமம், குறிக்கோள்கள், சிறப்பு எடுப்பனவு உரிமைகள், துணைநில் ஒழுங்குகள் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி போன்ற நாடுகளுக்கான கொடுகடன் திட்டங்கள்) சுதந்திர வர்த்தக வலயங்கள், இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக உடன்படிக்கைகள், சுங்க ஒன்றியங்கள், பொருளாதார ஒன்றியங்கள் (உ-ம்: ஐரோப்பிய ஒன்றியம்) பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் முறைமை (ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் முறைமை + மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை)

## 4. கொடுகடன் முகாமைத்துவம்

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

கொடுகடன்களை வழங்குவது வங்கிகளினதும் நிதியியல் இடையீட்டு நிறுவனங்களினதும் மைய வியாபாரமாக இருப்பதன் காரணமாக அவற்றின் செயலாற்றமும் வியாபார உறுதிப்பாட்டுத்தன்மையும் கொடுகடன் எவ்வாறு வினைத்திறனுடன் முகாமைப்படுத்தப்படுகின்றது என்பதிலேயே பெருமளவிற்குத் தங்கியிருக்கிறது. கொடுகடனின் முகாமைத்துவம் கடன் வழங்குவதற்கான தீர்மானத்திலிருந்து கடன்களின் வழங்கல் மற்றும் அறவிடல், கடன்/ கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம், கொடுகடன் ஆளுகை மற்றும் வங்கி - கடன்பாட்டாளர் உறவுமுறைகளைக் கட்டியெழுப்புதல் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. ஆகவே, பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் வங்கிகளினதும் நிதியியல் நிறுவனங்களினதும் கொடுகடன் வியாபாரத் துறையில் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் தொழிற்பாட்டு மட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். கொடுகடன் வியாபார விபரணத் துறையில் கொடுகடன் முகாமைத்துவ நுணுக்கங்கள் மற்றும் நடவடிக்கைகள் பெருமளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளன. ஆகவே, இது தொழில்நுட்ப மற்றும் நடைமுறை அறிவு ஆகிய இரண்டினையும் உள்ளடக்கிய சிறப்பியல்பு வாய்ந்த தொழில்சார் பாடமாக விளங்குகின்றது. இதன்படி, இப்பாடமானது, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கு கொடுகடன்

முகாமைத்துவத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்:

(அ) கொடுகடன் சாதனங்களின் விபரணங்கள்: நிதியியல்/ வங்கித்தொழில் வியாபாரம் மற்றும் பொருளாதாரத்தில் கொடுகடனின் வரைவிலக்கணம் மற்றும் வகிபாகம், கொடுகடன் சாதனங்களின் தொழிற்பாட்டு அம்சங்கள் (வாடிக்கையாளர் வகைகள், பண்புகள், பிணையங்கள், அடிப்படை நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவை) நிதியத்தினை அடிப்படையாகக் கொண்ட கொடுகடன் வசதிகள் (மேலதிகப் பற்றுக்கள், ஈடுகள், அடகுபிடித்தல், குத்தகைக்குவிடல், தொழிற்படு மூலதனக் கடன்கள், உண்டியல் கழிவிடல், உண்டியல் கொள்வனவு, பொதியிடலுக்கான கொடுகடன், நம்பிக்கைப் பொறுப்பு பெறுகைகள் கடன்கள், கொடுகடன் அட்டை வசதிகள், மீள்நிதியிடல் கொடுகடன் போன்றவை) மற்றும் கட்டணங்களை அடிப்படையாகக் கொண்ட வசதிகள் (நாணயக் கடிதம், உத்தரவாதங்கள், ஏற்றுக்கொள்ளல்கள் போன்றவை)

(ஆ) கொடுகடன் மதிப்பிடல் செயன்முறை: 6 விடயங்கள் (பண்புகள், இயலளவு, மூலதனம், நிபந்தனைகள், பிணையங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல்) காசு உருவாக்க மாதிரிகள் (திரவ இடர்நேர்வு, இலாப நட்டமற்ற பகுப்பாய்வு) கம்பனி கொடுகடன் மதிப்பீடு (முகாமைத்துவம், வர்த்தக ரீதியான நிதியியல் பொருளாதார மதிப்பீடுகள்) கொடுகடன் தரமிடல் (உள்ளக தரமிடல் மாதிரி மற்றும் வெளிவாரி தரமிடல்) கொடுகடன் விலையிடல்

(இ) கொடுகடன் கொள்கை மற்றும் ஆளுகை: கொடுகடன் கொள்கை ஆவணங்களின் உள்ளடக்கம், (கொடுகடன் சாதனங்கள், இலக்குச் சந்தைகள், பிணையங்கள், ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகள் - சபை, கொடுகடன் குழு, நிறைவேற்று அலுவலர்கள்) கொடுகடன் நிருவாக ஆவணங்கள், முகாமைத்துவத் தகவல்கள் மற்றும் அறிக்கையிடல், மத்திய வங்கிப் பணிப்புரைகள் மற்றும் கொடுகடன் இடர்நேர்வு மீதான கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகள் (பெறுமதி இழப்புக்கள்)

(ஈ) கொடுகடன் இடர்நேர்வு கண்காணிப்பு/ அனுமதிக்குப் பின்னரான பின்தொடர்தல்: காலாந்தர கடன்பாட்டாளர் தகவல்களைக் கண்காணித்தல், பரீட்சிப்புக்கள் (உள்ளக/ வெளிவாரி முகவர்கள்), கடன்களின் மீள்அட்டவணைப்படுத்தல், அறவிடல் நடவடிக்கைகள், கொடுகடன் பெறுதிகளைப் பயன்படுத்துதல் (பிணையமயப்படுத்தல், கொடுகடன் தவணை தவறுதல், சுவப்ஸ் போன்றன) பாசல் கொடுகடன் இடர்நேர்வு மாதிரிப்படுத்தல் மற்றும் மூலதன ஒதுக்குகள்

## 5. நிதியியல் நிறுவனங்களின் முகாமைத்துவம் (விருப்பத்திற்குரியது)

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

நிதியியல் நிறுவனங்கள் பணத்தின் மீதான அவற்றின் விசேடமான வியாபாரத்தின் காரணமாக, அவை பரந்த பேரண்ட - பொருளாதார மற்றும் பகிரங்கமான தாக்கத்தினைக் கொண்டிருப்பதனால் நிதியியல் நிறுவனங்களின் (முக்கியமாக நிதியியல் இடையீட்டாளர்கள்) முகாமைத்துவத்திற்கு ஏனைய வியாபார நிறுவனங்களின் முகாமைத்துவத்திலிருந்து வேறுபட்டதான விசேட முகாமைத்துவ அணுகுமுறையொன்று தேவைப்படுகின்றது. நிதியியல் நிறுவனங்களது முகாமைத்துவத்திற்கான திறவுகோல் யாதெனில் அவர்களது வியாபார கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுகின்ற விதத்தில் நிறுவனங்களின் இயலாற்றல் தொடர்பில் வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையினைக் கட்டியெழுப்பி அதனைப் பேணி வருவதேயாகும். ஒரு தரப்பினரின் பொறுப்பின் மூலமாக மற்றொரு தரப்பினரின் சொத்தொன்று நிதியிடப்படுகின்ற பணமொன்றின் கொடுக்கல்வாங்கல்களில் இவை ஈடுபடும் பொழுது வாடிக்கையாளரின் நம்பகத்தன்மை கொடுக்கல்வாங்கல்களினது வலுவான தன்மையின் திறவுகோலாக மாறுகின்றது. வாடிக்கையாளர் நம்பகத்தன்மையினைப் பாதுகாப்பதற்கு ஊழியரின் கொள்கைகள் மற்றும் முறைமைகளின் ஒருமைப்பாடு இன்றியமையாததொரு காரணியாகும். இதனைப் பொறுத்தவரை நிறுவனங்களின் முகாமைத்துவக் கோட்பாடுகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் சட்ட ரீதியான தேவைப்பாடுகள் என்பன தொடர்ந்து பின்பற்றப்படல் வேண்டும். நிதியியல் நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கு அத்தகைய முகாமைத்துவம் தொடர்பான அறிவு போதுமானதாக இல்லாமலிருக்குமாயின் அது மோசடி மற்றும் தவறான முகாமைத்துவம் என்பனவற்றின் காரணமாக அந்நிறுவனங்கள் முறிவடைவதற்கும் வங்குரோத்து நிலையடைவதற்கும் வழிவகுக்கும். ஆகவே, இப்பாடமானது பரந்தளவு துறைகளில் அறிவினை வழங்கக்கூடிய விதத்திலும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்களுக்கு நிதியியல் நிறுவனங்களின் முகாமைத்துவக் கூறுகளை வழங்கும் விதத்திலும் பரந்தளவு முகாமைத்துவ கட்டமைப்பொன்றிற்குள் அவர்களது தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கும் மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு உதவும் விதத்தில் வடிவமைக்கப்பட்டது. எனினும், இப்பாடத்தின் மையத் துறைகளை மட்டுப்படுத்தும் நோக்குடன் நிதியியல் நிறுவனங்களின் முகாமைத்துவத்திலுள்ள நிதியியல், மனிதவளங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அம்சங்கள் இப்பாடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அவை இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியியல் வாடிக்கையாளர் முகாமைத்துவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) கூட்டிணைக்கப்பட்டுள்ளவை: கம்பனிச் சட்டத்தின் கீழான நடைமுறைகள், கம்பனிகளின் பதிவுகளின் வேறுபட்ட வகைகள் மற்றும் தேவையான ஆவணங்கள்

(ஆ) நிதியியல் வியாபார நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதல் (வர்த்தக வங்கித்தொழில், சிறப்பியல்பு வாய்ந்த வங்கித்தொழில், நிதிக் கம்பனிகள், நிதிக் குத்தகைக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், நிதிய முகாமைத்துவக் கம்பனிகள், கூட்டுறவுச் சங்கங்கள், வணிக மற்றும் தரகுக் கம்பனிகள், கொடுப்பனவுப் பணிகள் வழங்குவோர் போன்றன)

(இ) பங்குடமையாளர்கள்: கம்பனிகள் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் சிறந்த கம்பனி ஆளுகை நடைமுறைகளின் நியதிகளில் அவர்களது உரிமைகள் மற்றும் பொறுப்பாண்மைகள்/ கடமைகள்

(ஈ) குழுமம் மற்றும் நிறுவனங்களின் அமைப்பியல்பு: வியாபார வழிகளை அடையாளம் காணுதல், காத்திரமான வியாபார மேற்பார்வைக்கான பொருத்தமான வழிகளை அறிக்கையிடல் மற்றும் குறிப்பாக தகவல்களைப் பெறுவதற்கான பெரும் தடைகள், நிறுவன வரைபடம், கம்பனி குழுமங்கள்

(உ) விரிவாக்க உபாயங்கள்: நிதியியல் சிறப்பு அங்காடிகள் பல்தொழில்கூட்டு குழுமங்கள் (வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் பிணையங்கள் வர்த்தகம்) துணை நிறுவனங்களை ஏற்படுத்துதல், இணைத்தல் மற்றும் கையேற்றல் (குறிக்கோள்கள் - அளவு மற்றும் செயற்பரப்பு, ஒரு பொருளை வாங்கவரும் நுகர்வோரிடம் மற்றைய பொருட்களையும் விற்பனை செய்தல், சந்தைப் பங்கு, ஒன்றுசேர்ந்து இயங்குதல், வரி விதிப்பு, நிலைக்குத்தாக ஒருங்கிணைத்தல் போன்றவை. சந்தை நடைமுறைகள் - சிநேகபூர்வமானவை அல்லது விரோதமானவை, சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் நுணக்கமாகக் கவனிக்கும் ஆய்வுகள், நிதியிடல் முறைகள் - முடுக்கி முழுக் கொள்வனவுகள், பங்குரிமை, வெற்றிகரமான/ தோல்வியடைந்த காரணிகள்)

(ஊ) நிதியியல் அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வுகள்: நிதியியல் தகவல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள், நிதியியல் கூற்றுக்களின் முக்கிய வெளிப்படுத்துகைகள், நிதியியல் செயலாற்றப் பகுப்பாய்வுகள் (நிதியியல்/ கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வுகளை மற்றும் இடர்நேர்வினை முக்கிய கவனத்திற்கொண்ட வியாபார செயலாற்ற அறிக்கைகள்)

(எ) கணக்காய்வு: வெளிவாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறை (கணக்காய்வு சாசனம், அதிகாரம், கடமைகள், மாதிரிகள், தொடர்பூட்டல் போன்றவை) கணக்காய்வு முறைகள் (இணங்குவிப்பினை கவனத்தில் கொண்டவை, இடர்நேர்வினை கவனத்தில் கொண்டவை, செயலாற்ற மதிப்பீடுகள் போன்றவை) முக்கிய கணக்காய்வு நியமங்கள், கணக்காய்வுக் குழு, அறிக்கையிடல் மற்றும் விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள்/ கணக்காய்வுக் கரிசனைகள்

(ஏ) இணங்குவிப்பு: குறிக்கோள்கள் (ஒருங்கிணைப்புக் கலாச்சாரம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம்) பிரயோகிக்கத்தக்க சட்டங்களுடன் இணங்கியொழுகுவதன் மீதான கண்காணிப்புப் பொறிமுறை ஒழுங்குவிதிகள், கொள்கைகள், ஊழியர்களின் செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இணங்கியொழுகாமையை அறிக்கையிடல் மற்றும் தொடர்பான ஒழுக்காற்று நடைமுறைகள், இணங்குவிப்பு அலுவலர்கள், உலக வங்கிகளிலும் நிதியியல் நிறுவனங்களிலும் அறிக்கையிடப்பட்ட அண்மைய இணங்குவிப்பு அல்லாப் பிரச்சனைகள்

(ஐ) கம்பனி ஆளுகை: சுருக்கமாக பரிணாம வளர்ச்சி, வரைவிலக்கணங்கள், கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆளுகை மற்றும் விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆளுகை, பணிப்பாளர் சபை (நியமனம், பொறுப்பாண்மைகள், பொருத்தம் மற்றும் தகுதிக்கான பிரமாணங்கள், சுயாதீனமான பணிப்பாளர்களுக்கும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கிடையிலான சமநிலை, சபைக் கூட்டங்கள், ஊதியங்கள், சட்ட ஏற்பாடுகள்) தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்கிடையேயான வேறாக்கல், சபையின் துணைக் குழுக்கள் (நியமனம் செய்தல், ஊதியங்கள், கணக்காய்வு, செயலாற்றம், இடர்நேர்வு முகாமைத்துவம் போன்றன) முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர், வியாபார மாதிரிகள் சபையின் வியாபாரம் மற்றும் தொழிற்பாட்டுக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவத்தின் நடைமுறைப்படுத்தல், உலகில் அறிக்கையிடப்பட்ட அண்மைய கம்பனி அபகீர்த்தி தொடர்பான விடயங்கள் கம்பனி சமூகப் பொறுப்பாண்மை மற்றும் நடைமுறைகள்

(ஒ) கம்பனி/ உபாய திட்டமிடல்: தொலைநோக்கு, பணி, பெறுமானங்கள், குறிக்கோள் மற்றும் சுற்றாடலை ஸ்கான் பண்ணுதல், பலம் வாய்ப்புக்கள், பலயீனம் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றிய பகுப்பாய்வுகள், வியாபார உபாயங்கள், முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள், முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளின் கண்காணிப்புப் பொறிமுறை

(ஓ) நிதியியல் மோசடிகள்: பொன்ஷி திட்டங்கள் (கோல்டன் கீ, மடோவ்)

சுமூகமற்ற வணிகத் தொடர்புகள் உள்ளகக் கட்டுப்பாடுகளை மீறுதல் (பாறிங்ஸ், சொசையிட்ரி ஜெனரல், யூபிஎஸ், ஜே.பி.மோர்கன் ஷேஸ்) உருவாக்கக் கணக்கீடுகள் மற்றும் மோசமான ஆளுகைகள் (ஐந்தொகைக்கு வெளியிலுள்ள மறைக்கப்பட்ட பொறுப்புக்கள் - என்றன், லேமன் பிறதர்ஸ்) அட்டை மோசடி, பணம் தூயதாக்கலை வசதிப்படுத்தல், சாதனங்களை தவறாக விற்பனை செய்தல்

(ஔ) இடர்நேர்வு முகாமைத்துவம்: பல்வேறு இடர்நேர்வு வகைப்படுத்தல்கள் (கொடுகடன், திரவத்தன்மை, சந்தை, தொழிற்பாடுகள், உபாயம், வெளிவாரி போன்றவை) நிறுவனங்கள் மீதான இடர்நேர்வுகளின் தாக்கம், இடர்நேர்வுகளை அடையாளம் காணும் குறிகாட்டிகள் மற்றும் முறைமைகள், இடர்நேர்வுகளை அறிக்கையிடுகின்ற முறைமைகள், இடர்நேர்வுகளைத் தணிக்கும் செயன்முறைகள், (உள்ளக் கட்டுப்பாடுகள், இடர்நேர்வுக் குழுக்கள், சுயாதீனமான முதன்மை இடர்நேர்வு அலுவலர் கட்டமைப்பு, உள்ளக மற்றும் வெளிவாரி மேற்பார்வை, இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வு போன்ற பேரண்ட மட்ட இடர்நேர்வு பாதுகாப்பு) இடர்நேர்விற்கெதிரான மூன்று அடுக்குகளைக் கொண்ட பாதுகாப்புக் கட்டமைப்பு (இரண்டாவது அடுக்காக முகாமைத்துவத்தினால் நிறுவப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் இணங்குவிப்பு மேற்பார்வை மற்றும் மூன்றாவது அடுக்கான சுயாதீன உத்தரவாதம்)

(க) ஒடுக்கிவிடுதல்: கம்பனிச் சட்டங்கள் மற்றும் ஏனைய பிரயோகிக்கத்தக்க சட்டவாக்கங்களின் கீழான நடைமுறைகள்

## 6. நிதியியல் சந்தைத் தொழிற்பாடுகள் (விருப்பத்திற்குரியது)

### I. பாட பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

நிதியியல் சந்தைகள் சேமிப்புக்களையும் நிதிகளையும் வர்த்தகப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகின்றன. இது நிதியியல் மயப்படுத்தல் மற்றும் முடுக்கி என்பனவற்றினூடாக சிறந்த பயன்பாட்டிற்கான நிதியியல் மூலவளங்களை உருவாக்கி மாற்றல் செய்வதற்கு உதவும். நிதியியல் சந்தைகள், வங்கிகள் மற்றும் ஏனைய கடன் வழங்கல் நிறுவனங்களினால் வழங்கப்படும் இடையீட்டு வியாபாரங்களுக்கு மாறாக முதலீட்டாளர்களிடையே நேரடியான நிதி/ சேமிப்புக்களின் கொடுக்கல்வாங்கல்களுக்கு உதவுகின்றன. நிதியியல் சந்தைகளில் வர்த்தகப்படுத்தப்படுகின்ற நிதியியல் சாதனங்கள் இரண்டு பரந்த வகைகளை அதாவது செலாவணிக்கான அல்லது பங்குரிமை மூலதனம் தொடர்பான வழங்கலுக்கான நிதி, படுகடன் பிணையங்கள் மற்றும் நாணயங்கள்

மற்றும் பெறுதிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இலாபம் அல்லது இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்கான எதிர்கால வழங்கல்களுக்கான நிதிகள் அல்லது நிதிகள்/ பிணையங்களின் விலைகள் மீதான ஒப்பந்தகளாகக் காணப்படுகின்றன. உலகம் முழுவதிலுமுள்ள நிதியியல் முறைமைகளின் முக்கிய கூறு யாதெனில் நிதியியல் சந்தைகளாகும். இவை வங்கித்தொழில், நிதி மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீது பாரிய செல்வாக்கினைக் கொண்டிருக்கின்றன. பொருளாதார நடவடிக்கைகள் நிதியியல் சந்தைகளினூடாக பெருமளவிற்கு நிதியிடப்பட்டு வசதிப்படுத்தப்படுகின்றன. இத்தகைய பின்னணியில், அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் நிதியியல் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கு மனப்பூர்வமான கொள்கைகளை மேற்கொண்டன. தற்போதைய சூழ்நிலையில், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்கள் காத்திரமான முறையில் செயலாற்ற வேண்டுமாயின், அவர்கள் நிதியியல் சந்தைத் தொழிற்பாடுகள் பற்றி சிறந்த புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், தொழில்சார் நிபுணர்கள் அர்ப்பணிப்புமிக்க ஆய்வுகளினூடாக குறிப்பிட்ட நிதியியல் சந்தைகள் அல்லது சாதனங்களில் சிறப்புப் பட்டத்தினை தொடரமுடியும். ஆகவே, இப்பாடமானது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்கள் சிறந்த செயலாற்றத்தினைப் புரிவதற்கு உதவுகின்ற விதத்தில் முக்கிய நிதியியல் சந்தைகள் தொழிற்பாடுகள் பற்றி பரந்த அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) பங்குச் சந்தை: நிறுவனம், பட்டியலிடல் நடைமுறைகள், சந்தைச் செயலாற்றக் குறிகாட்டிகள், வர்த்தகப்படுத்தல் நுணுக்கள்.

(ஆ) முறிச் சந்தை: அரச பிணையங்கள், கம்பனி முறிகள், வர்த்தகப் பத்திரங்கள், சுகுக்ஸ் என அழைக்கப்படும் இஸ்லாமிய நிதியியல் சான்றிதழ்

(இ) வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை: செலாவணி வீதத்தனை நிர்ணயித்தல், செலாவணி வீதக் கொள்கை அமைப்புக்கள், உடன், முன்னோக்கிய மற்றும் சுவப்ஸ் கொடுக்கல்வாங்கல்கள், வணிக உபாயங்கள் (விலை வேற்றுமை வணிகம், கட்டுக்காப்பு, ஊகம்)

(ஈ) அமைப்பியலாக்கப்பட்ட நிதியியல் சந்தை: பிணைய மயப்படுத்தல் மற்றும் சாதனங்கள், கொடுகடன் பெறுதிகள், அவற்றின் இடர்நேர்வுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ வகிபாகம்

(உ) நிதியியல் பெறுதிகள் சந்தை: முன்னோக்கியவை, சுவப்ஸ், தேர்வுகள், எதிர்வுகள், அவற்றின் இடர்நேர்வு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ வகிபாகம்

(ஊ) நிதியியல் சந்தைப் பணி வழங்குவோர்: பரிவர்த்தனைகள், தரகர்கள், வணிகர்கள், தரமிடல் முகவர்கள், கொடுகடன் பணியகம், தகவல் வழங்குவோர் (றொயிட்டர், புளூம்பேர்க்), நிதியியல் பத்திரிகைகள் (பினான்சியல் ரைம்ஸ், வோல் ஸ்ரீட் ஜேர்னல், புளூம்பேர்க் தொலைக்காட்சி)

(எ) நிதியியல் சந்தை நெருக்கடிகள் மீதான அண்மைய அறிவு: காரணங்கள், ஆசிய நிதியியல் நெருக்கடி மற்றும் அண்மைய உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள் போன்ற பிராந்திய நிதியியல் நெருக்கடிகளின் தன்மை மற்றும் தாக்கம். நிதியியல் சந்தை நெருக்கடிகளைத் தடுத்தல் மற்றும் தீர்த்தலில் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் வகிபாகம் நடைமுறை உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகள்

## 7. முதலீட்டு வங்கித்தொழில் (விருப்பத்திற்குரியது)

### I. பாடப் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

முதலீட்டு வங்கித்தொழில் என்பது நிதியியல் சந்தைகளுக்கும் முதலீடுகளுக்கும் வசதியளிப்பதற்காக வழங்கப்படும் முக்கிய நிதியியல் பணிகளாக விளங்குவதுடன், இது, வங்கித்தொழில் வியாபாரத்துடன் சேர்ந்து பெரும்பாலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. முதலீட்டு வங்கிகளின் தொழிற்பாடானது வங்கித்தொழில் குழுமங்களுள் அல்லது ஏனைய வியாபாரம்/ நிதியியல் குழுமங்களுள் காணப்படுகின்றன. அபிவிருத்தியடைந்துள்ள நிதியியல் சந்தைகளுக்கு முதலீட்டு வங்கிகள் பெருமளவிற்குத் தூண்டுதலாக விளங்கின. இம்முதலீட்டு வங்கிகள் கம்பனிகளும் தனிப்பட்ட முதலீட்டாளர்களும் அவர்களின் முதலீடுகள், கம்பனி நிதி, வியாபாரத்தினை மீளமைத்தல் மற்றும் நிதியியல் முகாமைத்துவ ஆலோசனைகள் என்பனவற்றினைக் கையாள்வதற்குப் பணியாற்றின. மேலும் முதலீட்டு வங்கிகள், உலகம் முழுவதிலுமுள்ள சந்தைகளுக்கு புதியதும் சிக்கலானதுமான ஏராளமான நிதியியல் சாதனங்களை அறிமுகப்படுத்தியிருக்கும் நிதியியல் பொறியியற்படுத்தும் தொழில்சார் துறையின் முன்னோடிகளாக விளங்குகின்றன. தோற்றம் பெற்றுவரும் சந்தைகளுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கும் பொருட்டு அவற்றின் நிதியியல் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கு முதலீட்டு வங்கித்தொழில் வியாபாரம் அவசியமானதாக விளங்குகின்றது. எனினும், முதலீட்டு வங்கிகளினது நிதியியல் சாதனங்களினது சிக்கலான தன்மை மற்றும் தற்பொழுது முதலீட்டு வங்கித்தொழிலிலிருந்து வேறானதாக அறிமுகப்படுத்தப்பட்டுவரும் புதிய சில்லறை வங்கித்தொழில் விடயங்கள் என்பனவற்றின் காரணமாக முதலீட்டு வங்கிகளும் நிதியியல் சந்தை நெருக்கடிகளுக்காக குற்றம் சாட்டப்படுகின்றன. ஆகவே, இப்பாடமானது நியம முதலீட்டு வங்கித்தொழில் முக்கியமான துறைகளிலும் அதன் புதிய போக்குகள் தொடர்பிலும், வங்கித்தொழில் மற்றும் நிதியியல்

தொழில்சார் நிபுணர்கள் முதலீட்டு வங்கித்தொழில் வியாபாரத்தில் பாண்டித்தியம் பெறுவதற்கு உதவுகின்ற விதத்தில் அறிவினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) முதலீட்டு வங்கித்தொழில் வியாபாரத்தின் பரிணாம வளர்ச்சி

(ஆ) வழங்கல்/ விநியோக முகாமைத்துவம்: பங்குரிமை மூலதனம் மற்றும் படுகடன் பிணையங்கள்

(இ) பிணையங்களின் அமைப்பு

(ஈ) சொத்து பிணையமயப்படுத்தல்

(உ) பிணையங்களின் வழங்கல்களுக்கு ஒப்புறுதியளித்தல்

(ஊ) கம்பனி நிதிப் பணிகள்: கடன் கூட்டுக்கள் மற்றும் முடுக்கி முழுக் கொள்வனவுகளுக்கு ஒழுங்கு செய்தல்

(எ) முதலீட்டு மதியுரை

(ஏ) நிதியியல் தரகுகளை மேற்கொள்ளுதல்

(ஐ) தனியுடைமை வர்த்தகம்

(ஒ) இணைப்புக்கள் மற்றும் கையேற்புப் பணிகள்: நெருங்கிக் கவனிக்கும் ஆய்வுகள், மதியுரைகள், ஒழுங்குகள் மற்றும் நிதியிடல்

(ஓ) செல்வ முகாமைத்துவம்

(ஔ) நிதிய முகாமைத்துவம்

(க) பிரச்சனைக்குரிய கம்பனிகளின் மீளமைத்தல் மற்றும் மீள்மூலதனமயப்படுத்தல்

(ங) முதலீடு தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பிணையங்களின் பகுப்பாய்வுகள்

(ச) செயற்றிட்ட மதிப்பீடு

## 8. அபிவிருத்தி நிதி (விருப்பத்திற்குரியது)

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

அபிவிருத்தி நிதியானது முக்கியமாக வருமான உருவாக்கச் செயற்றிட்டங்களுக்காக வடிவமைக்கப்பட்ட கடன் வழங்கல் சாதனங்களை உள்ளடக்கியிருக்குமிடத்து, அத்தகைய செயற்றிட்டங்களானது செயற்றிட்டங்களின் எதிர்கால சாத்தியவளத் தன்மை மற்றும் வருமான உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் அடிப்படையில் நிதியிடப்படும். இது சொத்துக்களின் பிணை மற்றும் கடன் வழங்கல் நிறுவனங்களுடனான கடன்பாட்டாளர்களின் கடந்த கால வியாபார உறவுமுறைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய கடன் வழங்கல் அடிப்படையிலிருந்தும் வேறுபட்டதாகும். மேலும், பயிற்சி, முகாமைத்துவம் மற்றும் நிதியியல் மதியுரை போன்ற நிதியல்லா ஆதரவுப் பணிகளை வழங்குதல், பின்தொடர்தல் மற்றும் வியாபாரத்தினை மீளமைத்தல் போன்றனவும் கடன் வழங்கல் நிறுவனங்களினால் வழங்கப்படல் வேண்டும் அல்லது ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும். ஆகவே, அபிவிருத்தி நிதி என்பது வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்கும் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற கொடுகடன் மற்றும் பணிகளைக் கொண்டதொரு பொதியாகும். தொழில்முயற்சிகள் நுண்பாக வியாபாரத்திலிருந்து சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. அபிவிருத்தி நிதியானது உற்பத்தி, வருமானம் மற்றும் தொழில்நிலை உருவாக்கம் என்பனவற்றிற்கு நேரடியாக பங்களிக்கும் விதத்தில் அபிவிருத்திப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறதுடன் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரத்தில் அபிவிருத்தி நிதிச் சாதனங்களினூடாக வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் அவற்றின் சில்லறை வாடிக்கையாளர் தளத்தினை விரிவாக்குவதற்கான வாய்ப்புக்களையும் பெருமளவில் கொண்டிருக்கின்றன. ஆகவே, சிறப்பியல்பு வாய்ந்த கடன் வழங்கல் நிறுவனங்களும் விநியோக முறைமைகளும் அரசாங்கத்தினால் பொருளாதார மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைகளினூடாக ஆதரவளிக்கப்பட்டன. இப்பாடமானது, வங்கித்தொழில் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் அர்ப்பணிப்புமிக்கதொரு துறையாக பொருளாதாரத்திற்கான அபிவிருத்தி நிதி தொழிற்பாட்டினை காத்திரமான முறையில் மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உதவும் விதத்தில் அபிவிருத்தி நிதிச் சாதனங்களின் மீதும் விநியோக மாதிரிகளிலும் அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

### II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்

(அ) செயற்றிட்டக் கடன் வழங்கல்: செயற்றிட்ட நிதிக்கான விதிகள், பிணைகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் செயற்றிட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட நிதியிடல்

(ஆ) வர்த்தக ரீதியான கடன் வழங்கல் தீர்மானங்களுக்கெதிரான கடன் வழங்கலுக்கான செயற்றிட்ட மதிப்பீடு: சந்தை மற்றும் கேள்வி பகுப்பாய்வுகள் (சூழ்நிலைப் பகுப்பாய்வு, கேள்வி எதிர்வுகூறல்) தொழில்நுட்பப் பகுப்பாய்வு (தயாரிப்புச் செயன்முறை மற்றும் தொழில்நுட்பம் - உற்பத்திக் கலப்பு, பொறியின் இயலளவு, அமைவிடம் மற்றும் தலம், செயற்றிட்ட வரைபடங்கள்) நிதியியல் பகுப்பாய்வு செயற்றிட்ட செலவின் மதிப்பீடு மற்றும் நிதியிடல் வழிமுறைகள், விற்பனை மற்றும் உற்பத்தியின் மதிப்பிடல், உற்பத்திச் செலவு, தொழிற்பாடு மூலதன தேவைப்பாடுகள் மற்றும் அதன் நிதியிடல், இலாப நட்டமற்ற புள்ளி, எறிவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று, எறிவு செய்யப்பட்ட ஐந்தொகை, மதிப்பீட்டு பிரமாணம் (கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் மற்றும் கழிவிடப்படாத காசுப்பாய்ச்சல் மாதிரிகள்) உள்ளக வருவாய் வீத மீளச் செலுத்தும் காலம், உணர்திறன் பகுப்பாய்வு, நிதியியல் அமைப்பு, செயற்றிட்ட மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரித்தல்

(இ) சிறிய நடுத்தர தொழில்முயற்சி நிதியிடல்: சிறிய நடுத்தர தொழில்முயற்சியின் வரைவிலக்கணம், பொருளாதார அபிவிருத்தியின் வகிபாகம், சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதில் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் முக்கியத்துவம், நிதிகளின் மூலம் (மீள்நிதியிடல், உலகளாவிய நிதிகள், வட்டி உதவுதொகை, கொடுகடன் உத்தரவாதங்கள், துணிகர தொழில்முயற்சி மூலதனம்) ஆதரவுக் கொள்கைகள் (ஒழுங்குமுறைப்படுத்தல்/ வரிச் சலுகைகள், விரிவாக்கல் பணிகள் போன்றவை), நலிவடைந்த செயற்றிட்டங்களைப் புனரமைத்தல்

(ஈ) நுண்பாக நிதி: வறுமையை ஒழிப்பதற்கு நுண்பாக நிதியின் முக்கியத்துவம், வறுமைக்கோடு, நுண்பாக நிதி விநியோக மாதிரிகள், நிதியியல் அறிவு மற்றும் உள்ளடக்கம், வங்காளதேசத்தின் கிறாமின் வங்கி, ஒழுக்கவியல்சாராத நுண்பாக நிதி மற்றும் நடைமுறைகள் தொடர்பான கரிசனைகள், நுண்பாக நிதியின் ஒழுங்குவிதிகள் மற்றும் சவால்கள்

## 9. மத்திய வங்கித்தொழில் (விருப்பத்திற்குரியது)

### I. பாடத்தின் பொதுநோக்கு மற்றும் குறிக்கோள்

உலகில் மத்திய வங்கித்தொழில் அடிப்படை வர்த்தக வங்கித்தொழிலிருந்து வளர்ச்சியடைந்த நாணய மற்றும் நிதி கொள்கை வகுப்பாளராகவும் ஒழுங்குமுறைப்படுத்துநராகவும் படிப்படியாக பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது. உலகம் முழுவதிலுமுள்ள மத்திய வங்கிகளின் தொழிற்பாட்டு மாதிரிகள் நாட்டின் குறித்துரைக்கப்பட்ட பொருளாதார மற்றும் நிதியியல் தேவைப்பாடுகளைப்

பொறுத்து வேறுபடுவதுடன் அவற்றின் ஆளுகை முறைமைகளும் வேறுபடுகின்றன. பொதுவாக மத்திய வங்கிகள் நாணயங்களை அச்சிடுகின்றன. பேரண்டப் பொருளாதார நோக்கங்களுக்காக நாணயச் சுற்றோட்டத்தின் மீது கொள்கைகளை (நாணயக் கொள்கை) மேற்கொள்ளுதல், பாதுகாப்பானதும் ஆற்றல்மிக்கதுமான வங்கித்தொழில் முறைமைக்காக வங்கிகளை ஒழுங்குமுறைப்படுத்தல், பன்னாட்டு நம்பிக்கைகளைப் பாதுகாப்பதற்காக நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தல் மற்றும் தொடர்பான அரசாங்கங்களுக்கு பொருளாதார குறிக்கோள்கள் மற்றும் நிதியியல் கொள்கை மதியுரைகளை வழங்குதல், வியாபாரங்கள் அதேபோன்று வங்கித்தொழில் உறுதிப்பாடு மற்றும் நிதியியல் துறைகள் என்பன மத்திய வங்கியின் கொள்கைகளின் செல்வாக்கிற்குட்படுகின்றன அல்லது மத்திய வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்கைகள் இரண்டின் மீதும் தங்கியிருக்கின்றன. வியாபார முகாமையாளர்கள் மத்திய வங்கியின் கொள்கைகளை ஊகிக்க அல்லது விளங்கிக் கொள்ளமுடியாமல் போகுமிடத்து எதிர்பாராத விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அதேவேளை, மத்திய வங்கியின் கொள்கைகள், பொருளாதாரம், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளின் உறுதிப்பாட்டினை மேம்படுத்த உதவும். ஆகவே, இப்பாடமானது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் தொழில்சார் நிபுணர்கள் மத்திய வங்கித்தொழில் சூழலில் சிறந்த முறையில் அவர்கள் செயற்படுவதனை இயலச்செய்யும் விதத்தில் கோட்பாட்டு ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் மீதான ஒட்டுமொத்த அறிவினை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## II. விதந்துரைக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம்:

(அ) உலகில் மத்திய வங்கித்தொழிலின் பரிணாம வளர்ச்சியும் முக்கியமான நிகழ்வுகளும்

(ஆ) மத்திய வங்கித்தொழில் தொழிற்பாடுகளின் பரிணாம வளர்ச்சி: நாணய வெளியீடு, நாணயக் கொள்கை, வங்கியாளரின் வங்கி, இறுதிக் கடன் ஈவோன், வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம், வங்கித்தொழில்/ நிதியியல் ஒழுங்குவிதிகள்

(இ) மத்திய வங்கித்தொழில் குறிக்கோள்கள்: ஒற்றை, இரட்டை மற்றும் பல்வகை

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள்: நாணயச் சபை முறைமை, மத்திய வங்கி நிறுவப்பட்டமை, அதன் குறிக்கோள்கள் மற்றும் முக்கிய குறிக்கோள்கள், நாணயச் சபை, மத்திய வங்கியின் அமைப்பு, நாணய விதிச் சட்டத்தின் முக்கிய ஏற்பாடுகள், நிதியியல் கூற்றுக்கள் மற்றும் உபாயத் திட்டங்கள், கடந்த கால முக்கிய கொள்கைகள்

(உ) உலகளாவிய முன்னணி மத்திய வங்கிகள் தொடர்பான அளவீடு மற்றும் அண்மைய கொள்கைகள், இங்கிலாந்து வங்கி, ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் முறைமை, ஐரோப்பிய மத்திய வங்கிகள், யப்பானிய வங்கி, நாணயக் கொள்கைச் சாதனங்களின் பரிணாம வளர்ச்சி (மரபுவழியான மற்றும் மரபுவழியற்றவை) கணியம்சார் தளர்த்தல்கள், வங்கிகளையும் நிதியியல் நிறுவனங்களையும் பாதுகாத்தல்

(ஊ) மத்திய வங்கியின் சுயாதீனம்: கோட்பாடு, சட்ட ஏற்பாடுகள், உலகளாவிய நடைமுறைகள்

## கற்பித்தல் பொருட்கள்

விதந்துரைக்கப்பட்ட கற்பித்தல் பொருட்களின் பட்டியல் மற்றும் மாதிரி விடைகளுடன் கூடிய மாதிரி வினாத்தாள்களும் உரிய தேர்வு நடவடிக்கைகளுக்கு வழிகாட்டல்களாக வழங்கப்படும். நியாயமானதொரு காலப்பகுதிக்குள் இலங்கை வங்கியாளர் நிறுவகம் அனைத்துப் பாடங்கள் தொடர்பிலும் கல்வி ஆய்வுகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினைக் கொண்டிருக்கும். எனினும், இவற்றினை தமிழ்மொழியில் வழங்கமுடியாமலிருக்கும். இருப்பினும் மாதிரி வினாத்தாள்களும் மாதிரி விடைகளும் தமிழ்மொழியில் கிடைக்கத்தக்கதாக இருக்கும். சாத்தியமான விண்ணப்பதாரிகள் பரீட்சைகளுக்குத் தயாராகிக் கொள்வதற்குத் தரமான பாடநூல்களையும் சஞ்சிகைகளையும் கட்டுரைகளையும் வியாபாரச் செய்திகளையும் கற்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றர். புதிய கல்வியல் நிகழ்ச்சித்திட்டம் சொந்தமான வாசித்தல் பொருட்கள் மற்றும் கற்பித்தல்/ பயில்தல் முறைகள் மற்றும் தேர்ச்சி என்பனவற்றுடன் கூடிய சந்தையின் மூலம் பொருத்தமான தயாரிப்புக்களை மேற்கொள்வதற்கு சில காலம் எடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மேலதிக விசாரணைகளுக்கு

### பதிவு செய்தல் மற்றும் பரீட்சைகளுக்கு

பணிப்பாளர்
பரீட்சை
இல.5, மைல் போஸ்ட் அவென்யூ
கொழும்பு 3

தொலைபேசி: 5220308, 5220310
மின்னஞ்சல்: exam@ibsl.lk

### அங்கத்தவர் தொடர்புகளுக்கு

பணிப்பாளர்
அங்கத்தவர் தொடர்புகள்
இல.5, மைல் போஸ்ட் அவென்யூ
கொழும்பு 3

தொலைபேசி: 5220301, 5220307
மின்னஞ்சல்: mr@ibsl.lk

### வகுப்புகளுக்கு

பணிப்பாளர், வங்கித்தொழில் மற்றும் நிதிக் கல்லூரி
இல.1081, மருதானை வீதி
கொழும்பு 8

தொலைபேசி: 5741616, 2684382
மின்னஞ்சல்: cobaf@ibsl.lk

வெப்தளம்: **www.ibsl.lk**